அங்கு ஒன்றுமில்லை. நீங்கள்... அது வயிற்றின் பையிலேயே இருக்கும் ஒரு சீழ்க்கட்டி நிலை.

அப்படி உங்களால் நீண்ட காலம் வாழ முடியாது; அது உங்களுக்குத் தெரியும். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. நீங்கள் விசுவாசிக் கிறீர்களா...?

# தேவனை அவருடைய வார்த்தையின்படியே ஏற்றுக்கொள்வது

# TAKING GOD AT HIS WORD

53-1103

செவ்வாய்க்கிழமை மாலை,
நவம்பர் 3, 1953

ஸ்போர்ட்சென்டர், ஓவன்ஸ்போரோ,
கென்டக்கி, அமெரிக்கா

**சகோ.வில்லியம் பிரன்ஹாம்**

# தேவனை அவருடைய வார்த்தையின்படியே ஏற்றுக்கொள்வது (53-1103)

இந்த இரவு வெளியே குளிராக இருக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்... ஆனால் நாம் உள்ளே குளிராக இருக்க மாட்டோம். பரிசுத்த ஆவியானவர் நம் இருதயங்களை அத்தகைய விதமாக அனலாக்கும் படி நாங்கள் ஜெபிக்கிறோம், அவருடைய பிரசன்னம் மிகவும் தொட்டு ணரக்கூடியது என்பதை நாம் அறியும் வரை. என் கைகளின் மேல் இருக்கும் வெளிச்சத்தைப் போல அவரும் இன்றிரவு தொட்டுணரக் கூடியவராக இருக்கிறார் என்று நான் விசுவாசிக்கிறேன். அதை நீங்கள் விசுவாசிக்



தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, சகோதரியே. தேவன்மீது விசுவாசம் வையுங்கள். சந்தேகப்படாதீர்கள். விசுவாசிக்கிறவர்களுக்கு எல்லாம் கூடும் என்று விசுவாசியுங்கள்.

*56* உங்களுக்குச் சற்று பரவாயில்லையா, ஐயா? நீங்கள் இப்போதுதானே இங்கே குணமாக்கப்பட்டீர்கள்? உஹ்-ஹூம். சற்று, அந்த மனிதருக்குப் பின்னால் ஏதோ ஒன்று நடந்தது. ஒரு நிமிடம், இப்போது; அங்கே ஒரு—ஒரு அம்மா அமர்ந்திருக்கிறாள்.

இந்த மனிதருக்கு வயிற்றுப் பிரச்சனை இருந்தது, அங்கே ஒரு அம்மா வயிற்றுப் பிரச்சனையோடு அமர்ந்திருக்கிறாள். உங்களிடம் ஒரு அட்டை இருந்தது, ஆனால் நீங்கள் மறந்துவிட்டீர்கள்... நீங்களும்—நீங்களும் மேடைக்கு வர பயப்படுகிறீர்கள், இல்லையா? நீங்கள் எழுந்து உங்கள் முழு இருதயத்தோடும் விசுவாசித்து, உங்கள் சுகமடைதலை ஏற்றுக்கொள்ள மாட்டீர்களா?

நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? அப்படிச் செய்தால், தேவன் உங்களைக் குணமாக்குவார். பயப்பட வேண்டாம். உங்களை காயப்படுத்த

அம்மா, ஒரு நிமிடம் உங்கள் கால்களில் நில்லுங்கள், நான் உங்களைப் பார்க்கட்டும். உங்களுக்கும் எனக்கும் இடையில் அதிக ஆவி இருக்கிறது, பாருங்கள். அது சரி. ஆம், ஐயா. உங்களுக்கு—உங்கள் விலாவில் ஏதோ பிரச்சனை இருக்கிறது. அது சரிதானே? விலாவில். அது என்னவென்று அவர்களுக்குத் தெரியவில்லை.

அது ஒரு வளர்ச்சி, இல்லையா? ஒரு காரியம். நரம்பு நசுங்கியதால் அது ஏற்பட்டிருக்கிறது, அது நரம்பின் சுருக்கம். உங்கள் விலாவின்மேல் உங்கள் கையை வையுங்கள், உங்கள் மறுக்கையை தேவனுக்கு நேராக உயர்த்துங்கள், உங்கள் சுகமடைதலை ஏற்றுக்கொளுங்கள்.

கர்த்தராகிய இயேசுவே, அவளைக் குணமாக்கும். இந்தக் கட்டி அவளுடைய விலாவை விட்டு விலகவும், அவள் குணமடையவும் வேண்டும் என்று, உம்முடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் நான் ஜெபிக்கிறேன், நான் கேட்கிறேன். ஆமென்.



கவில்லையா? அவர் வெளிச்சத்தைப் போலவே உண்மையானவர், அல்லது உங்கள் ஐம்புலன்களால் நீங்கள் தொடக்கூடிய எதையும் போலவே உண்மையானவர். இருப்பினும், தேவனைத் தொடர்புகொள்வதற்காக மனிதனுக்கு ஐம்புலன்கள் கொடுக்கப்படவில்லை. தனது பூமிக்குரிய வீட்டைத் தொடர்புகொள்ளவே மனிதனுக்கு ஐம்புலன்கள் கொடுக்கப்பட்டன. ஆறாவது புலனாகிய விசுவாசத்தின் மூலம் நாம் தேவனைத் தொடர்புகொள்கிறோம். இந்த ஐம்புலன்கள் இந்த சரீரத்தைக் கட்டுப் படுத்துகின்றன, ஆனால் ஆறாவது புலன் விசுவாசம் ஆகும்.

மிசௌரி மாநில மக்களைப் பற்றிய ஒரு பழைய சொலவடையை நீங்கள் கேள்விப் பட்டிருக்கிறீர்களா, "எனக்குக் காட்டுங்கள்", மற்றும் "பார்ப்பதே விசுவாசிப்பது" என்று சொல்வார்களே? "பார்ப்பதே விசுவாசிப்பது" என்று நீங்கள் எப்போதாவது கேள்விப் பட்டிருக்கிறீர்களா? "பார்ப்பதே விசுவாசிப்பது" என்பது எவ்வளவு எளிமையானது என்பதை நான் உங்களுக்குக் காட்ட விரும்புகிறேன்.

பார்ப்பது விசுவாசிப்பது அல்ல. அது தவறு என்று என்னால் நிரூபிக்க முடியும்.

இப்போது, மனித சரீரத்தைக் கட்டுப் படுத்தும் ஐம்புலன்கள் நமக்கு—நமக்கு இருக்கின்றன, அவை: பார்த்தல், சுவைத்தல், உணர்தல், நுகர்தல், கேட்டல். அவைதான் ஐம்புலன்கள். இப்போது, சகோதரர் வீட், சற்று இங்கே வாருங்கள். நான் உங்களை எதற்கும் ஒரு உதாரணமாகப் பயன்படுத்த விரும்ப வில்லை, ஆனால்... உங்களை வெளிப் படையாகக் காட்டுகிறேன், ஆனால்...

*2* இப்போது, எனக்கு முன்பாக ஒரு மனிதர் நிற்கிறார், அவர் உயரமாக இருக்கிறார், அவர் ஒருவகையான கட்டம் போட்ட சூட் அணிந்திருக்கிறார், வெளிர் நிறமானது. அது உண்மை என்று எத்தனை பேர் விசுவாசிக்கிறீர்கள், எல்லா இடங்களிலும் உள்ள உங்கள் கைகளைப் பார்ப்போம். அது உண்மை என்று நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? அவர் அங்கே நிற்கிறார் என்று உங்களுக்கு எப்படித் தெரியும்? அவர் அங்கே நிற்கிறார் என்பதை நான் ஒரேயொரு காரணத்தால் மட்டுமே



ஜெபிக்கிறேன். இயேசுவின் நாமத்தில் அது அவளை விட்டு விலகட்டும். ஆமென்.

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, தாயே. போங்கள், இப்போது, பாருங்கள் இது வெறும் மாயாஜாலம் அல்ல. அது—அது அவரை அவருடைய விசுவாசத்தில் எளிமையாக ஏற்றுக் கொள்வது, ஆம், அவருடைய—அவருடைய வார்த்தையில், அது சரி என்று விசுவாசிப்பது. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. போங்கள், கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. சரி. உங்கள் முழு இருதயத்தோடும் விசுவாசியுங்கள், தேவன் இந்தக் காரியத்தை உங்களுக்கு அருளுவார்.

*55* எனக்கு முன்பாக ஒரு பெரிய கட்டிடம் நிற்பதை நான் பார்க்கிறேன். அது இங்கே நடு வானத்தில் நிற்கிறது, நான் அதை அடையாளம் கண்டுகொண்டேன். அது ஒரு மருத்துவமனை. நான் அதை அநேக முறை பார்த்திருக்கிறேன், அது மேயோ சகோதரர்களின் மருத்துவமனை.

ஒரு பெண் உள்ளே நுழைவதை நான் பார்க்கிறேன். அவள் சிவப்புக் கோட் அணிந்து அங்கே அமர்ந்திருக்கிறாள். நீங்கள் மேயோஸ் மருத்துவமனைக்குப் போகவில்லையா? இந்த

விரும்பியிருக்கிறாள். அது விலகிப்போக அருளும், இயேசுவின் நாமத்தில்.

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, சகோதரியே. தேவனுக்கு நன்றி சொல்லிக் கொண்டும், துதித்துக்கொண்டும், மகிழ்ச்சியோடு போங்கள். சரி.

*54* வாருங்கள், அம்மா. நீங்கள் வரும்போதே உங்கள் முழு இருதயத்தோடும் விசுவாசியுங்கள். தேவன் உங்களைக் குணமாக்குவார் என்று விசுவாசிக்கிறீர்களா? அது சரி. ஆகா, நீங்கள் அநேக காரியங்களால் நோய்வாய்ப்பட்டிருக்கிறீர்கள். அதில் ஒன்று, ஒரு சிறுநீரகப் பிரச்சனை அது உங்களை மிகவும் மோசமாகத் தொந்தரவு செய்கிறது, ஒரு விஷத்தன்மையை ஏற்படுத்துகிறது. அது உண்மைதானே? அவர் இப்போது உங்களை முழுமையாகக் குணமாக்குகிறார் என்று விசுவாசிக்கிறீர்களா?

ஆண்டவரே, என் சகோதரியை நீர் குணமாக்க வேண்டும் என்று நான் ஜெபிக்கிறேன், மேலும் அது இனி ஒருபோதும் அவளைத் தொந்தரவு செய்யக்கூடாது என்று



அறிவேன், அவர் அங்கே நிற்கிறார் என்று பார்வைப் புலன் சொல்கிறது. நான் அவரைப் பார்க்கிறேன். ஆனால் இப்போது நான் அவரைப் பார்க்கவில்லை, ஆனாலும் அவர் அங்கே நிற்கிறார் என்று எனக்குத் தெரியும். யாராவது என்னுடன் விவாதித்து, அவர் அங்கே நிற்கவில்லை என்று சொல்ல விரும்புவீர்களா? என்னை விவாதத்தில் வீழ்த்த முயற்சிப்பீர்களா? அவர் அங்கே இருக்கிறார் என்று எனக்குத் தெரியும், என்னால் அவரைப் பார்ப்பது சாத்தியமற்றது, ஆனால் அவர் அங்கே இருக்கிறார் என்று எனக்குத் தெரியும், ஏனென்றால் அவர் அங்கே இருக்கிறார் என்று எனக்குச் சொல்லும் உணர்தல் புலன் எனக்கு இருக்கிறது. அது அதே மனிதர்தான், ஏனென்றால் அவருடைய கைகள் உயரே இருக்கின்றன. பாருங்கள், நான் எட்ட வேண்டும், அவர் ஒரு பெரிய மனிதர். அது அதே மனிதர்தான், நான் அவரை உணர முடியும் என்பதால் அவர் அங்கே இருக்கிறார் என்று எனக்குத் தெரியும், என்னால் அவரைப் பார்க்க முடியாது. எனவே பார்ப்பது விசுவாசிப்பது அல்ல, அப்படித்தானே? அவர்

அங்கே இருக்கிறார் என்று நான் விசுவாசிக்கிறேன், ஆனாலும் என்னால் அவரைப் பார்க்க முடியாது. நான் அவரைப் பார்த்துக் கொண்டிருந்ததைப் போலவே அவர் அங்கே இருக்கிறார் என்று எனக்குத் தெரியும், ஏனென்றால் உணர்தல் புலன் மூலம் நான் அவரைத் தொடர்புகொள்கிறேன்.

இப்போது, நான் அவரை உணர்வது சாத்தியமற்றது, அவர் என் கைக்கு எட்டாத தூரத்தில் இருக்கிறார். என் உணர்தல் புலன் செயலற்று இருக்கிறது, ஆனால் அவர் அங்கே இருக்கிறார் என்று எனக்குத் தெரியும், ஏனென்றால் நான் அவரைப் பார்க்கிறேன். நான் சொல்வதன் அர்த்தம் புரிகிறதா? நன்றி, சகோதரர் வீட். பாருங்கள், எனவே பார்ப்பது விசுவாசிப்பது அல்ல, உணர்வது சில நேரங்களில் விசுவாசிப்பதாக இருக்கிறது, அது சரியா?

இப்போது, அங்கே ஒரு சிறிய இசை... ஸ்வரம். [யாரோ பியானோ வாசிக்கிறார்கள்] அங்கே இசை இருக்கிறது. எத்தனை பேர்... எத்தனை—எத்தனை பேர் அது இசை என்று



*53* வாருங்கள், அம்மா. [ஒலி நாடாவில் காலியிடம்]

உங்களின் கட்டி நிலையிலிருந்தும் நீங்கள் விடுபட விரும்புகிறீர்களா? அறுவை சிகிச்சை இல்லாமல் தேவன் உங்களைக் குணமாக்குவார் என்று விசுவாசிக்கிறீர்களா? அவர் உங்களைக் குணமாக்குவார் என்று விசுவாசிக்கிறீர்களா? இப்போது, நீங்கள்... நீங்கள் என்ன விரும்புகிறீர்கள் என்றால், நானும் உங்கள்மீது கைகளை வைக்க வேண்டும் என்று விரும்பு கிறீர்கள், ஏனென்றால் உங்களுக்கு அப்படித்தான் போதிக்கப்பட்டுள்ளது, இல்லையா? இங்கே வாருங்கள்.

பிதாவே, இந்தத் தொடர்பு கொள்ளும் புள்ளி, இந்த பெண்ணின் விருப்பம், அந்த ஸ்திரீ, "நான் கிறிஸ்துவின் வஸ்திரத்தையாகிலும் தொட்டால்" என்று சொன்னதைப்போல இருக்கிறது. "கட்டி" என்று அழைக்கப்படும் இந்தக் கொடூரமான பிசாசு அவளை விட்டு விலகும்படி, நான் அவள்மேல் கைகளை வைக்க வேண்டும் என்று இந்தப் பெண்

கர்த்தராகிய இயேசு உங்களைக் குணமாக்குவாராக, இயேசுகிறிஸ்துவின் நாமத்தில்.

52 வாருங்கள், அம்மா. நீங்கள் வரும்போதே உங்கள் முழு இருதயத்தோடும் விசுவாசிக்கிறீர்களா? விசுவாசிக்கிறீர்களா? இளம் பெண்ணே, உங்களுக்கு என்ன பிரச்சனை என்பதை தேவன் எனக்கு வெளிப்படுத்தினால், இயேசுகிறிஸ்துவை உங்கள் பரிகாரியாக ஏற்றுக்கொள்வீர்களா? நீங்கள் ஒரு பெண் களுக்கான பிரச்சனையால் அவதிப்படுகிறீர்கள். அது சரிதானே?

அது ஒரு—ஒரு கசிவை ஏற்படுத்துகிறது. அது உண்மைதானே? அது ஒரு சீழ்க்கட்டி, அது ஆபத்தானது, ஆனால் இப்போது நீங்கள் உங்கள் முழு இருதயத்தோடும் விசுவாசித்தால், அது உங்களை விட்டு விலகும், இனி ஒருபோதும் உங்களைத் தொந்தரவு செய்யாது. அதை ஏற்றுக் கொள்கிறீர்களா? தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

கர்த்தர் உங்களை ஆசீர்வதித்து உங்களைக் குணமாக்குவாராக, இயேசுவின் நாமத்தில்.



விசுவாசிக்கிறீர்கள்? உங்கள் கைகளைப் பார்ப்போம். சரி, இப்போது உங்கள் கைகளைக் கீழே போடுங்கள். இப்போது, எத்தனை பேர் அதைப் பார்த்தீர்கள்? சரி, அது இசை என்று உங்களுக்கு எப்படித் தெரியும்? பார்ப்பதே விசுவாசிப்பது என்று நான் நினைத்தேன். ஆனாலும் அங்கே இசை இருந்தது, நீங்கள் அதைப் பார்க்கவில்லை, ஆனாலும் நீங்கள் அதை விசுவாசிக்கிறீர்கள், ஏன்? நீங்கள் அதை உணரவில்லை, அப்படித்தானே? நீங்கள் அதை நுகரவில்லை. நீங்கள் அதைச் சுவைக்கவில்லை, ஆனால் நீங்கள் அதைக் கேட்டீர்கள், அது சரியா?

கேட்கும் திறன் உள்ள அனைவரும் அதைக் கேட்டார்கள், கேட்கும் புலன் உள்ளவர்கள் அந்தச் சத்தத்தைக் கேட்டார்கள், ஏனென்றால் அது இசை, அது உங்களுக்குத் தெரியும். அப்படியானால் பார்ப்பது விசுவாசிப்பது அல்ல, அப்படித்தானே? நிச்சயமாக இல்லை.

3 இப்போது, விசுவாசம் என்றால் என்ன? "விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும் (வெறுமனே ஒரு கற்பனையான

எண்ணம் அல்ல), அது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், நீங்கள் காணாதவைகளின்," சுவைக்காத, உணராத, நுகராத அல்லது கேட்காதவற்றின் "நிச்சயமுமாயிருக்கிறது." எந்தப் புலன்களும் அதை அறிவிக்கவில்லை, ஆனாலும் ஆறாவது புலனாகிய விசுவாசம்...

புறம்பான மனுஷன் ஐந்து புலன்களால் ஆளப்படுகிறான்: பார்த்தல், சுவைத்தல், உணர்தல், நுகர்தல் மற்றும் கேட்டல். உள்ளான மனுஷன் இரண்டு புலன்களால் ஆளப் படுகிறான்: விசுவாசம் அல்லது அவிசுவாசம். நீங்கள் அதை விசுவாசித்தால், சரீரத்தின் இயற்கையான புலன்களில் ஏதேனும் ஒன்று அதை அறிவிப்பதைப் போலவே அது உங்களுக்கும் உண்மையாக இருக்கும். உண்மையாகவே, சரீரத்தின் இந்தப் புலன்கள் ஏமாற்றப்படலாம், ஆனால் விசுவாசம் முற்றிலும் தவறாதது.

நீங்கள் நீதிமன்றத்திற்குச் சென்று, நீங்கள் இருந்தீர்கள்... ஒரு விபத்து நடந்ததை நீங்கள் பார்த்தீர்கள் என்று சொன்னால். நீங்கள் ஒரு ஜன்னல் வழியாகப் பார்த்துக்கொண்டிருந்தீர்கள்



உங்களுக்குக் கொடுப்பார் என்று விசுவாசியுங்கள், அதை ஏற்றுக்கொளுங்கள். நீங்கள் அதைப் பெற்றுக்கொள்ளலாம். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. சரி, ஐயா, அது உங்களைப் பொறுத்தது.

*51* சரி, வாருங்கள் சகோதரியே. நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? உங்கள் முழு இருதயத் தோடும்? உங்கள் வயதில் இருக்கும் எவ-... பெரும்பாலான அனைவருக்கும் இருக்கும் ஒரு பெண்ணின் பிரச்சனை இருக்கிறது, பாருங்கள், அதுபோல, அது மாதவிடாய் நின்றதனால் ஏற்பட்டது. மேலும் உங்களுக்கு ஒரு ஆஸ்துமா நிலை இருக்கிறது அது உங்களுக்கு கா-... ஏற்படுத்துகிறதா? அது சரிதானே?

இருமல் மற்றும் எல்லாம், நீங்கள் இரவில் படுக்கும்போது. இப்போது, இயேசுகிறிஸ்து இங்கே இருக்கிறார் என்று விசுவாசிக்கிறீர்களா? நீங்கள் அவருடைய பிரசன்னத்தில் இருக்கிறீர்கள் என்று விசுவாசிக்கிறீர்களா? தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. அப்படியானால் போங்கள்.

குணமடைய முடியும் என்று நினைக்கிறீர்களா? நினைக்கிறீர்களா? அப்படியானால், மேடையை விட்டுப் போகும்போது, "நன்றி, கர்த்தராகிய இயேசுவே, நான் அதை இப்போது... நாமத்தில் ஏற்றுக்கொள்கிறேன்" என்று சொல்லிக்கொண்டே செல்லுங்கள். நீங்கள் நான் உங்கள் கை... என் கைகளை உங்கள்மீது வைக்க வேண்டும் என்று விரும்புகிறீர்கள், இல்லையா? [சகோதரி, "ஆம்." என்கிறாள்] தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

இயேசுவின் நாமத்தில், நீர் அதை அருள வேண்டும் என்று நான் ஜெபிக்கிறேன்.

நான் உங்கள் மனதைப் படிக்கவில்லை, ஆனால் உங்கள் விருப்பத்தை என்னால் சொல்ல முடிந்தது. இப்போது, நீங்கள் உங்கள் விருப்பத்தைப் பெற்றுக்கொண்டீர்கள். போய் தேவனுக்கு நன்றி சொல்லுங்கள்.

"தேவனுக்கு ஸ்தோத்திரம்" என்று சொல்வோமாக. ஓ, எவ்வளவு ஆச்சரியம்.

50 அங்கே அமர்ந்திருக்கும் ஐயா, நீங்கள் குடலிறக்கத்திலிருந்து விடுபட விரும்பு கிறீர்களா? நீங்கள் விரும்பினால், தேவன் அதை



என்றால், அதற்காக அவர்கள் உங்கள் வார்த்தையை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள், இல்லை ஐயா. உங்கள் பார்வை சில நேரங்களில் இரட்டைப் பார்வையாக இருக்கலாம், மேலும் இல்லாத காரியங்களை நீங்கள் பார்க்கக்கூடும். உதாரணமாக, ஒரு சூடான கோடை நாளில் நீங்கள் சாலையில் செல்லும் போது அல்லது வயலைக் கடக்கும் போது, நீங்கள் பார்க்கிறீர்கள், ஒரு கானல் நீரைப் பார்க்கிறீர்கள். அது அப்படியே தண்ணீரைப் போலவே இருக்கும். பாலைவனத்தில் இறக்கும் தருவாயில் இருக்கும் மக்கள் பலமுறை இவற்றை நோக்கி ஓடி, அவர்கள் குளிக்கும் தண்ணீர் என்று நினைத்து, மணலைத் தங்கள் மீது வீசிக்கொள்வார்கள். இது ஒரு ஒளியியல் மாயை. நீங்கள் பார்க்கிறீர்கள், தண்ணீர் எவ்வளவு தெளிவாக இருக்க முடியுமோ அவ்வளவு தெளிவாக அதைப் பார்க்கிறீர்கள், ஆனால் அது தண்ணீர் அல்ல, பாருங்கள். ஆனால் விசுவாசம் உறுதியானது.

அந்த இரவில் படகில் துடுப்பு வலித்துக் கொண்டிருந்த பேதுருவைப் பாருங்கள். அவர் இரவு முழுவதும் துடுப்பு வலித்து மீன்

பிடித்தார், அவர் எதையும் பிடிக்கவில்லை. மறுநாள் காலை... நிச்சயமாக இரவு முழுவதும் மீன்பிடித்து ஒன்றும் கிடைக்காமல் இருப்பது எவ்வளவு சோர்வூட்டக்கூடியது என்பது எந்தவொரு மீனவனுக்கும் தெரியும். எனவே அவரும் மற்ற மீனவர்களும் ஆற்றங்கரையின் ஓரத்தில் உட்கார்ந்து வலையை அலசிக் கொண்டிருந்தார்கள். அப்போது இயேசு அந்த வழியாக வந்து பேச ஆரம்பித்தார். பேதுரு சொல்வதை நான் கேட்க முடிகிறது, "இந்த மரக்கட்டையை எடுத்துக்கொண்டு போய், உட்கார்ந்து, கவனிப்போம். இந்த மனிதர் கொஞ்சம் வித்தியாசமானவர், அவர் மற்ற மனிதர்களை விட வித்தியாசமாகப் பேசுகிறார். இந்த நசரேயனைப் பற்றி, இந்தப் பரிசுத்த-உருளுபவரைப் பற்றி (Holy-roller) என்னவென்று பார்ப்போம்."

எனவே அவர்கள் கீழே சென்று, அதன் அருகில், அவர் பேசிக்கொண்டிருந்த இடத்தின் பக்கத்தில் உட்காருகிறார்கள், மேலும் அவர் இன்னும் கொஞ்சம் நெருக்கமாக நகர்வதை நான் பார்க்கிறேன். உங்களுக்குத் தெரிந்த முதல் காரியம், அவர் பேதுருவின் படகை இரவலாகக்



சொல்லப்போகிறேன். நீங்கள் விட்டுவிட முயற்சிக்கும் ஏதோ ஒன்று உங்களிடம் இருக்கிறது. உங்களுக்கு ஒரு பழக்கம் இருக்கிறது, அந்தப் பழக்கம்தான் உங்களுக்கு இருதயம் மற்றும் வயிற்றுப் பிரச்சனை இரண்டிற்கும் காரணமாக இருக்கிறது.

அது சிகரெட் பிடிப்பது. அது சரிதானே? அப்படியானால் அதை விட்டுவிடுங்கள். நீங்கள் அதைச் செய்வீர்களா? தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. மேடையிலிருந்து கீழே செல்லுங்கள், சுகமடையுங்கள். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

தேவனுக்கு ஸ்தோத்திரம். உங்கள் மனசாட்சியில் பாவத்தோடு வராதீர்கள்.

அம்மா, மூட்டுவலியிலிருந்து நீங்கள் விடுபட விரும்புகிறீர்களா? இந்த மேடையின் இறுதிவரை நடந்து சென்று, உங்கள் கால்களை மேலேயும் கீழேயும் மிதித்து, "நன்றி, ஆண்டவரே" என்று சொல்லுங்கள்.

*49* வாருங்கள், அம்மா. அறுவை சிகிச்சை இல்லாமல் அந்த கட்டியிலிருந்து உங்களால்

உங்கள் இருவர்மீதும் அசைவாடிக் கொண்டிருக்கிறார். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

*48 வாருங்கள் ஐயா.*

ஓ, மக்களே. தேவனுடைய ஆவியானவர் சபையில் அசைவாடிக்கொண்டிருக்கும்போது மக்கள் எப்படி அமைதியாக உட்கார்ந்திருக்க முடியும்? உங்களால் எப்படி அமைதியாக இருக்க முடிகிறது? சர்வவல்லமையுள்ள தேவனின் தெய்வீக வல்லமை அசைவாடுவதை உங்களால் ஏன் பார்க்க முடியவில்லை? தேவன்மீது விசுவாசம் வையுங்கள். ஹ்ம்ம்.

என் சகோதரனே, உங்கள் முழு இருதயத்தோடும் நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? உங்களுக்கு—உங்களுக்கு ஒரு இருதய நோயும் வயிற்றுப் பிரச்சனையும் இருக்கிறது. அது சரிதானே? நான் தேவனுடைய தீர்க்கதரிசி என்று நீங்கள் விசுவாசிக்கிறீர்களா?

[அந்த மனிதர், "நான் விசுவாசிக்கிறேன், ஆம்." என்கிறார்] நன்றி, ஐயா. அப்படியானால், உங்கள் பிரச்சனையை நான் உங்களுக்குச்



கேட்டு உள்ளே ஏறினார். மக்கள் கூட்டம் அவரை நெருக்கத் தொடங்கியது. அவர் படகில் வெளிச்சென்று மக்களுக்குப் போதிக்க ஆரம்பித்தார். அவர் போதித்து முடித்த பின்பு, பேதுருவிடம் சொன்னார், “இப்போது, நீ ஆழத்திலே தள்ளி, மீன்பிடிக்கும்படி வலையைப் போடு என்று நான் விரும்புகிறேன்.”

*4* இப்போது, பேதுரு ஓரிரு இரவுகள் மீன்பிடித்த ஒரு சாதாரண ஆள் அல்ல. மீன்பிடிப்பதற்கான அனைத்து அறிகுறிகளும் அவருக்குத் தெரியும்; சந்திரன் எப்படி இருக்க வேண்டும், தண்ணீர் எப்படி இருக்கிறது என்பது அவருக்குத் தெரியும். அவர்கள் இரவு முழுவதும் மீன்பிடித்தும் எதையும் பிடிக்க வில்லை. இப்போது, கொஞ்சம் யோசித்துப் பாருங்கள், இதோ, நீங்கள் இதைப் புரிந்துகொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன். பாருங்கள், அவர்கள் இரவு முழுவதும் மீன்பிடித்தும் எதையும் பிடிக்க வில்லை; ஆனாலும் இயேசு அவர்களிடம், அவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்த இடத்திற்கே நேராகத் திரும்பச் சென்று வலையைக் கீழே போடும்படியும், அவர்கள்

ஏராளமான மீன்களைப் பிடிப்பார்கள் என்றும் சொன்னார்.

இப்போது, ஒரு மணி நேரத்திற்கு முன்பு, மணிநேரத்திற்கு மணிநேரம், இரவு முழுவதும் அந்தத் தண்ணீரில்தான் மீன்பிடித்தும் ஒரு மீன் கூட சிக்கவில்லை என்றால், உலகத்தில் எப்படி நீங்கள் வலையைக் கீழே போட்டு ஒரு பெரிய மீன் கூட்டத்தைப் பிடிக்கப் போகிறீர்கள்? அவை அங்கு நகரவே இல்லை. இது பகுத்தறிவாகவோ, விவேகமாகவோ கூடத் தெரியவில்லை.

ஆனால் பேதுரு சொன்னார், அவரைக் கவனியுங்கள், அது இதுதான், "ஆண்டவரே, நாங்கள் இராமுழுவதும் பிரயாசப்பட்டும் ஒன்றும் அகப்படவில்லை; ஆகிலும் உம்முடைய வார்த்தையின்படியே வலையைப் போடுகிறேன்." அங்கே பாருங்கள். இது தேவனை அவருடைய வார்த்தையின்படி ஏற்றுக் கொள்வதாகும், நீங்கள் உணர்வதையோ சுவைப்பதையோ அல்லது—அல்லது இது சொல்வதையோ அல்லது அது சொல்வதையோ அல்ல. இது தேவனை அவருடைய



கர்த்தர் உங்களை ஆசீர்வதித்து, உங்களைக் குணமாக்கி, உங்கள் நாட்களை நீடிக்கச் செய்வாராக, என் சகோதரனே. இயேசு கிறிஸ்துவின் நாமத்தில், நான் அதைக் கேட்கிறேன். ஆமென்.

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, என் சகோதரனே. மகிழ்ச்சியோடு போய், உங்கள் முழு இருதயத்தோடும் விசுவாசியுங்கள்.

47 அங்கே அமர்ந்திருக்கும் அம்மா, அந்த மூலவியாதியிலிருந்து நீங்கள் விடுபட விரும்புகிறீர்களா? நீங்கள் அழுதுகொண்டும், ஜெபித்துக்கொண்டும், அதிலிருந்து விடுபட விரும்பிக்கொண்டும் இருக்கிறீர்கள். தேவன் உங்களுக்காக அதைச் செய்வார் என்று நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? விசுவாசிக்கிறீர்களா?

அவளுக்குப் பக்கத்தில் அமர்ந்திருக்கும் உங்கள் கால்களில், அவயவங்களில் ஏதோ பிரச்சனை இருக்கிறது, அது சரிதானே, சகோதரியே?

நீங்கள் உங்கள் சுகமடைதலை ஏற்றுக் கொண்டால்; பரிசுத்த ஆவியானவர் இப்போது

*45* வாருங்கள், அம்மா. இங்கே வாருங்கள். இது பயங்கரமாக இருக்கிறது, இல்லையா, சகோதரியே? ஆஸ்துமா நிலை எப்போதும் அவர்களுக்கு இதுபோன்ற பிரச்சனைகளை ஏற்படுத்துகிறது. தேவன் இப்போது உங்களைக் குணமாக்குகிறார் என்று நீங்கள் விசுவாசிக் கிறீர்களா?

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. உங்கள் வழியில் செல்லுங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதித்து, உங்களைக் குணமாக்கட்டும், என் சகோதரியே. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக என்பதே என் ஜெபம்.

*46* சரி, வாருங்கள், ஐயா. நீங்கள் முழு இருதயத்தோடும் விசுவாசிக்கிறீர்களா? ஐயா, நீங்கள் விசுவாசிக்க வேண்டும். எல்லாவற் றையும் விட அதிகமான மக்களைக் கொல்லும் ஒரு நோயால் நீங்கள் அவதிப்படுகிறீர்கள்:

இருதய நோய். நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? சரி, தேவன் இப்போது உங்களைக் குணமாக்குகிறார், அதை விசுவாசிக்கிறீர்களா? கல்வாரியில் அவர் செய்த உங்கள் சுகமடைதலை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா?



வார்த்தையின்படி ஏற்றுக்கொள்வது. "உம்மு டைய வார்த்தையின்படியே ஆண்டவரே, நான் வலையைப் போடுகிறேன். அவைகள் எப்படி அங்கே இருக்கப் போகின்றன என்று எனக்குத் தெரியாது, ஆனால் நீர்..." அங்கு எதுவும் இல்லாமல் இருந்து, தேவன் தமது வார்த்தையை நிறைவேற்றுவார் என்று விசுவாசித்து பேதுரு விசுவாசத்தோடு வலையைப் போட்டிருந்தால், விசுவாசம் சிலவற்றை அங்கே கொண்டுவந்திருக்கும். அது அதைச் செய்தது. அது அதைச் செய்தது. மீன் அங்கே இருந்தது.

*5* நீங்கள் சொல்கிறீர்கள், "சரி, சகோதரர் பிரன்ஹாம், நான் மருத்துவரிடம் சென்றிருந்தேன். நான் குணமடைய முடியாது என்று அவர் என்னிடம் சொல்கிறார்."

அந்த மனிதர், ஒருவேளை அவர் நேர்மையானவராக இருக்கலாம். அவர் அப்படித்தான் இருப்பார் என்று நான் நம்புகிறேன், மக்கள் மீது இரக்கம் காட்டும் எந்த மருத்துவரும் அப்படித்தான் இருப்பார் என்று நான் நம்புகிறேன். அந்த மனிதர்

தனக்குத் தெரிந்த அனைத்தையும் செய்திருந்தால்; தேவன் அவருக்கு அளித்த அத்தனை அறிவாற்றலையும் கொண்டு அவர் உங்களுக்கு உதவ முயன்றிருந்தால், அவர் தனது பங்கைச் செய்துவிட்டார். அவர் செய்யக்கூடியது அவ்வளவுதான். சரி, அவர் சொல்வார், "நீங்கள் இறக்கப் போகிறீர்கள். அங்கே உங்களுக்குப் புற்றுநோய் இருக்கிறது, உங்களுக்கு ஏதோ இருக்கிறது, நாங்கள் அறுவை சிகிச்சை செய்தோம், அது அதை நிறுத்தவில்லை. அது இன்னும் தொடர்கிறது, அதைப் பற்றி எங்களால் எதுவும் செய்ய முடியாது. எங்களால் இதற்கு மேல் வெட்ட முடியாது, இதற்கு மேல் வெட்டினால் நாங்கள் உங்களைக் கொன்றுவிடுவோம், எனவே எங்களால் இதைப் பற்றி எதுவும் செய்ய முடியாது."

ஆனால் இயேசு சொன்னார், "விசுவாசிக் கிறவனுக்கு எல்லாம் கூடும்."

பிறகு, நீங்கள் சாதிக்க முடிந்தால், அல்லது போதுமான விசுவாசம், போதுமான விசுவாசத்தைப் பெறுங்கள், இங்கே அல்ல ஆனால் இங்கே, நீங்கள் தேவனால்



"அவர்கள் சொஸ்தமாவார்கள்." எங்கள் பரம பிதா வேறு என்ன செய்ய முடியும்?

நீங்கள் வருகிறீர்களா, ஐயா? எங்கள் பரம பிதா செய்யக்கூடிய வேறொன்றும் இல்லை. அது சரிதானே?

*44* உன் பிரச்சனை எனக்குத் தெரியும், சிறியவனே. உன் பிரச்சனை எனக்குத் தெரியும். உங்கள் ஒவ்வொருவரின் பிரச்சனையும் எனக்குத் தெரியும். கா-...அவர் என்னிடம் சொல்லும் வரை என்னால் சொல்ல முடியாது. நீங்கள் விசுவாசிக்கிறீர்களா, என் சகோதரனே? நீங்கள் அவருடைய பிரசன்னத்தில் இருக்கிறீர்கள் என்று விசுவாசிக்கிறீர்களா?

அந்த வயிற்றுப் பிரச்சனை யிலிருந்து நீங்கள் குணமடைய விரும்பு கிறீர்களா, அதனால் நீங்கள் வீட்டிற்குப் போய் சாப்பிட முடியுமே? நான் தேவனுடைய தீர்க்கதரிசி என்று நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? அப்படியானால் போய் நீங்கள் விரும்புவதைச் சாப்பிடுங்கள். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

இயேசுகிறிஸ்துவின் சாட்சிக்காகவும் வாழ வேண்டும் என்று நான் ஜெபிக்கிறேன்.

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. சரி. நன்றி.

*43* நீரிழிவு மற்றும் சில காரியங்களிலிருந்து விடுபட்டு, குணமடைய விரும்புகிறீர்களா அம்மா? விரும்புவீர்களா? இந்த நிமிடமே உங்கள் சுகமடைதலை ஏற்றுக்கொள்கிறீர்களா?

பிதாவே, எங்கள் சகோதரியை நீர் ஆசீர்வதிக்க வேண்டும் என்று நான் ஜெபிக்கிறேன், அவள் போகும்போது குணமடைந்து போகட்டும் என்று, இயேசுவின் நாமத்தில் கேட்கிறேன். ஆமென்.

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, சகோதரியே. இப்போது போங்கள்.

இது மிகவும் சிறியதாகத் தோன்றுகிறது. தேவன் சொன்னார், "வியாதியஸ்தர்மேல் அவர்கள் கைகளை வைப்பார்கள் அவர்கள்..." என்ன? [சபையார், "சொஸ்தமாவார்கள்" என்கிறார்கள்.] சத்தமாகச் சொல்லுங்கள்:



குணமாக்கப்படப் போகிறீர்கள் என்று விசுவாசிப்பதற்குப் போதுமான விசுவாசத்தை இங்கே பெறுங்கள். அதை ஆராய்ந்து பார்த்து, நீங்கள் அவருக்கு ஊழியம் செய்யப் போவதாகவும், நீங்கள் செய்யப்போகும் அனைத்தையும் அவரிடம் சொல்லுங்கள், மேலும் தேவனுக்கு உங்கள் வாக்குறுதிகளை அளியுங்கள், அப்போது உங்கள் முழு இருதயத் தோடும், ஆத்துமாவோடும், மனதோடும் நீங்கள் குணமடையப் போகிறீர்கள் என்று நீங்கள் விசுவாசிக்கும் அளவுக்குப் போதுமான விசுவாசம் உங்கள் இருதயத்தில் இறங்க முடியும்; உங்களை வியாதியோடு வைத்திருக்க நரகத்தில் போதுமான பிசாசுகள் இல்லை.

“உம்முடைய வார்த்தையின்படியே ஆண்டவரே, நான் வலையைப் போடுகிறேன்.” நாட்டில் உள்ள ஒவ்வொரு வலையையும், தண்ணீரின் ஒவ்வொரு குழியையும் அல்லது ஒவ்வொரு மருத்துவரின் அலுவலகத்தையும் மற்றும் ஒவ்வொரு மருத்துவமனையையும் நீங்கள் சென்று பார்த்திருக்கலாம். குணமடைய உங்களால் முடிந்தவரை முயற்சி செய்து, உங்களுக்குத் தெரிந்த அனைத்தையும்

செய்துகொண்டு நீங்கள் இங்கும், அங்கும், மற்ற இடங்களிலும் இருந்திருக்கலாம். ஆயினும், நீங்கள் தேவனை அவருடைய வார்த்தையின்படி ஏற்றுக்கொள்கிறீர்கள், இல்லை... மருத்துவர்கள் என்றால்... மருத்துவர்கள் தேவனுடைய ஊழியர்கள், அவர்கள் தங்களால் முடிந்த அனைத்தையும் செய்ய முயற்சி செய்கிறார்கள். அவர்கள் தங்களுக்கு என்ன அறிவு இருக்கிறதோ அதை மட்டுமே செய்ய முடியும். தேவன் அவர்களுக்குச் செய்யக் கொடுத்த அறிவை மட்டுமே. ஆனால் அவர்கள் தங்களால் முடிந்த அனைத்தையும் செய்துவிட்டு வேறு எதுவும் செய்ய முடியாது என்றாகி, உங்கள் நேரம் குறிக்கப்பட்டுவிட்டது போல் தோன்றும் போதும், நீங்கள் ஜெபித்து, நீங்கள் அவருக்கு ஊழியம் செய்யப் போவதாகவும், நீங்கள் அவருக்காக எதையாவது செய்யப் போவதாகவும், அவருடைய ராஜ்யத்திற்கு உதவப் போவதாகவும், உலகத்தை ஒரு சிறந்த இடமாக மாற்றப் போவதாகவும், அவருடைய சபைக்கு உதவப் போவதாகவும், அவருக்காக ஆத்துமாக்களை ஆதாயம் செய்ய உதவப் போவதாகவும் தேவனிடம் சொல்லலாம்,



நீங்கள் வர பயந்தீர்கள். அது உண்மைதானே? நான் உங்கள் மனதைப் படிக்கவில்லை, ஆனால் உங்கள் வாழ்க்கையை உங்களால் மறைக்க முடியாது. இங்குள்ள ஒவ்வொரு ஆவியும் இப்போது எனக்குக் கீழ்ப்பட்டிருக்கிறது. சரி. பயப்பட வேண்டாம்.

தேவனே உங்கள் பரிகாரி. இங்கே மேலே வருவதற்குப் பயப்பட வேண்டாம்; நீங்கள் இங்கே மேலே வர வேண்டிய அவசியமு மில்லை. நீங்கள் இருக்கும் இடத்திலேயே நீங்கள் விசுவாசித்தால், தேவன் உங்களைக் குணமாக்குவார்.

இப்போது நீங்கள் அதை ஏற்றுக்கொள்கிறீர்களா, உங்கள் சுகமடைதலை? தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டீர்கள். இப்போது நீங்கள் உங்கள் சுகமடைதலை ஏற்றுக்கொள்கிறீர்களா? தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

நீங்கள் போகலாம், தேவனின் சமாதானம் உங்கள்மேல் இருப்பதாக, அந்தப் புற்றுநோய் சாவதாக, நீங்கள் தேவனின் மகிமைக்காகவும்

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, என் சகோதரனே. சில நாட்களில் உங்கள் அறிக்கையைக் கேட்பதில் மகிழ்ச்சியடைவேன். தேவன் உங்களோடிருப்பாராக.

*42* சபையார் முடியுமா...? தேவன் ஆவியாயிருக்கிறார், நாம் அவரை ஆராதிக்க வேண்டும். நாம் "கர்த்தருக்கு ஸ்தோத்திரம்" என்று சொல்லலாமா? நீங்கள் உங்கள் முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும், மனதோடும் விசுவாசிக்கிறீர்களா? தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

எதற்காக அழுகிறீர்கள், சகோதரியே? ஒரு நிமிடம் இங்கே என்னைப் பாருங்கள். அழ வேண்டாம், இது மகிழ்வதற்கான நேரம், பாருங்கள். நீங்கள் எதைக் குறித்து பயப்படுகிறீர்கள்? எதற்காக அஞ்சுகிறீர்கள்? நீங்கள் புற்றுநோயால் அவதிப்படுகிறீர்கள், அது உங்களுக்குத் தெரியும்.

அது ஒரு கட்டியான புற்றுநோய், அது பெண்களுக்கான சுரப்பியில் உள்ளது. அது சரிதானே? இந்த மேடைக்கு வருவதற்கு உங்களிடம் ஒரு ஜெப அட்டை இருந்தது,



மேலும் அவருக்கு ஒரு காரணத்தைக் கொடுத்து, பிறகு சொல்லுங்கள், "தேவனே, நீங்கள் அதன் அடிப்படையில்—அதன்... அடிப்படையில் என்னைக் குணமாக்கினால், என் வாழ் நாளெல்லாம் நான் உமக்கு ஊழியம் செய்வேன்." அப்போது தேவன் உங்கள் இருதயத்தில் ஒரு சிறிய விசுவாசத்தை இறக்கி, அது அப்படித்தான் என்று உங்களிடம் சொல்கிறார். மருத்துவர் என்ன சொன்னாலும் சரி, தேவனுடைய வார்த்தை அப்படித்தான் இருக்கிறது. "உம்முடைய வார்த்தையின்படியே ஆண்டவரே, அது முடிந்தது." ஆம் ஐயா, அதுதான் உண்மை என்று எனக்குத் தெரியும்.

*6* ஓ, தேவன் பேரில் விசுவாசமாயிருங்கள், தேவனுடைய இறையாண்மையும் மற்றும் தேவனுடைய இரக்கங்களும் எப்படிப்பட்டவை, அவர் எவ்வாறு நம்மிடம் வருவார், மற்றும் நாமோ, ஏழை, புழுப்போன்ற மக்கள், ஒரு ஜெல்லிமீன் கூட்டத்தைப் போல உலகத்தில் இங்கே அமர்ந்திருக்கும் சிறிய, பழைய மக்கள், அப்படியிருந்தும் நாம் நமது புத்திசாலித்தனத்தை எடுத்துக்கொண்டு தேவனுக்கு என்ன செய்ய

வேண்டும் என்று சொல்ல முயற்சிக்கிறோம். அவர் அளந்தபோது...

நான் கொஞ்ச காலத்திற்கு முன்பு கலிபோர்னியாவில் உள்ள பாலோமர் மலையில் நின்றுகொண்டிருந்தேன், அங்குள்ள ஒரு பெரிய கண்ணாடி (தொலைநோக்கி) வழியாகப் பார்த்தேன், என்னால் நூற்றிருபது மில்லியன் ஒளியாண்டுகள் விண்வெளியைப் பார்க்க முடிந்தது. அதை மைல்களாகப் பிரித்து, அது எவ்வளவு—எத்தனை மைல்கள் என்று பாருங்கள், அது எத்தனை பில்லியன் மற்றும் பில்லியன் மற்றும் பில்லியன் மைல்கள் என்று மைல்களில் பிரிக்க முயற்சிப்பதற்காக, ஓவன்ஸ்பரோவைச் சுற்றி ஒன்பதுகளின் வரிசையை நீங்கள் ஓடச் செய்வீர்கள். அதற்கு அப்பாலும் நிலவுகள், மற்றும் நட்சத்திரங்கள், மற்றும் உலகங்கள், மற்றும் கிரகங்கள் என முடிவில்லாமல் இருக்கின்றன; தேவன் அவை ஒவ்வொன்றையும் உண்டாக்கினார். மேலும், "சரி, தேவன் அதைச் சொல்லியிருக்கலாம், ஆனால் அது அப்படித்தான் என்று என்னால் விசுவாசிக்க முடியவில்லை" என்று சொல்ல முயற்சிக்கும்படி, நம்மைப் போன்ற ஒரு சிறிய,



அது உண்மையா? உங்களுக்கும் எனக்கும் இடையில் ஒரு பிரசங்க பீடம் நிற்பதை நான் பார்ப்பதுபோல் எனக்குத் தோன்றுகிறது. நீங்கள் ஒரு போதகராகவோ அல்லது பிரசங்கியாகவோ இருந்ததில்லையா, அல்லது, ஒரு பிரசங்கியாய் இருக்கிறீர்களா? அது சரிதானே? ஆம்.

அது உண்மையா? ஆம், ஐயா. சரி, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, என் அன்பான சகோதரனே, இயேசுகிறிஸ்து உங்களை முற்றிலும் குணமாக்குவார். இங்கே வாருங்கள், நான் ஜெபிக்கிறேன்.

எங்கள் பரம பிதாவே, எங்கள் சகோதரன்மேல் இரக்கமாயிருக்கும்படி நான் உம்மிடம் கேட்கிறேன், தேவனுடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் வல்லமை, உம்முடைய ஊழியனாகிய இந்த மனிதரை முற்றிலும் குணமாக்கட்டும், ஆண்டவரே, அவர் மீண்டும் சுகமடைந்து, அதனால் அவர் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க முடியும். அதை அருளும், ஆண்டவரே, அவரை ஆசீர்வதியும், இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் நான் ஜெபிக்கிறேன். ஆமென்.

*41 இப்போது, நீங்கள்தான் நோயாளி, இல்லையா, ஐயா? இப்போது, உங்களை எனக்குத் தெரியாது. என் வாழ்நாளில் நான் உங்களை பார்த்ததில்லை என்று நினைக்கிறேன், அப்படிப் பார்த்திருந்தாலும் எனக்கு நினைவில்லை. நாம் முற்றிலும் அந்நியர்கள்.*

*இங்கே, உங்கள் சகோதரன் அல்ல, அவருடைய பிரசன்னத்தில் நீங்கள் நிற்கிறீர்கள் என்று நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? நீங்கள் விசுவாசிக்கிறீர்கள். அதை நீங்கள் முழு இருதயத்தோடும் விசுவாசிக்கிறீர்களா? தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.*

*உங்களுக்கு—உங்களுக்கு ஒரு அறுவை சிகிச்சை நடந்திருக்கிறது. நீங்கள்... நீங்கள் மருத்துவமனையில் இருப்பதை நான் பார்க்கிறேன், அவர்கள் அறுவை சிகிச்சை செய்கிறார்கள் ஒரு... அது ஒரு சிறுநீர்ப்பை, என்று நான் நம்புகிறேன், அந்த நிலைக்கு. அது சரிதானே? அவர்கள் அந்த—அந்த புரோஸ்டேட் சுரப்பியை எடுத்துவிட்டார்கள், இப்போது உங்களுக்கு ஒரு குழாய் பொருத்தப் பட்டிருக்கிறது.*



துளியளவு, பழைய மனதாக நாம் எப்படி நம்மைக் குறுக்கிக்கொள்ள முடியும்? ஓ என் தேவனே, நான் அவரை அவருடைய வார்த்தையின்படி ஏற்றுக்கொள்கிறேன், அது அப்படித்தான் என்று சொல்கிறேன், அதை விசுவாசிக்கிறேன், என் அறிக்கையைச் செய்கிறேன், தேவனுடைய வார்த்தையின் மேல் நிற்கிறேன், அது அதைத் தீர்த்துவிடுகிறது.

சில—சில காலத்திற்கு முன்பு, சில ஆண்டுகளுக்கு முன்பு, தேசத்தின் சிறந்த கிளினிக்குகளில் ஒன்றான மேயோ பிரதர்ஸ் (அதன் பிறகு இரண்டு முறை அங்கு நேர்காணல் செய்யப்பட்டேன்), என்னிடம், "ரெவரெண்ட் பிரன்ஹாம், நீங்கள் எப்போதாவது குணமடைவது சாத்தியமற்றது" என்று சொன்னார்கள்.

நான் சொன்னேன், "தேவனே, நீர் என்னைக் குணமடையச் செய்தால், என் முழு இருதயத்தோடும் நான் உமக்கு ஊழியம் செய்வேன்," மேலும் அங்கே ஏதோ ஒன்று நங்கூரமிட்டது. ஹா, மேயோஸ் என்ன சொன்னார்கள் என்பது எந்த வித்தியாசத்தையும்

ஏற்படுத்தவில்லை, தேவன் என்ன சொன்னார் என்பது எனக்குத் தெரியும். மேலும் இன்றிரவு, என் வாழ்நாளில் நான் இருந்ததை விடச் சிறந்த ஆரோக்கியத்துடன் இருக்கிறேன். அந்த நேரம் வரை நான் நூற்று இருபத்தெட்டுக்கு மேல் எடையிருந்ததே இல்லை, இன்றிரவு நான் ஏறக்குறைய நூற்று அறுபது எடையிருக்கிறேன்.

அது இதைக் காட்டுகிறது... இப்போது அந்த மனிதர் நேர்மையானவர். நான் மேயோ பிரதர்ஸ் கிளினிக்கை அவமதிக்கவில்லை, இல்லை ஐயா. அந்த மனிதர்கள் நேர்மை யானவர்கள், அவர்கள் நல்ல மனிதர்கள், அவர்கள் தங்களுக்குத் தெரிந்த அனைத்தையும் செய்தார்கள், ஆனால் அவர்களுக்குத் தெரிந்தது அவ்வளவுதான், அது அவர்களின் அறிவின் முடிவாக மட்டுமே இருந்தது. ஆனால் விசுவாசத்திற்கு முடிவில்லை. ஆமென். ஓ, நான் அதை நேசிக்கிறேன், அது ஒரு பலவீனமான எலும்பை (wishbone) வெளியே எடுத்துவிட்டு அங்கே ஒரு முதுகெலும்பை வைக்கிறது என்று நான் உங்களுக்குச் சொல்கிறேன், அது சரிதான். தேவன் உங்களுக்காக இருக்கிறார் என்பதையும், அவர் அதை வாக்குத்தத்தம் செய்திருக்கிறார்



நீங்கள் விசுவாசம் வைத்து, நீங்கள் நம்பினால் மற்றும்—மற்றும் தேவன் அதை நிறைவேற்றுவார். அது ஒன்றே காரியம், இருக்கும் ஒரே தீர்வு, தேவன் மூலமாக மட்டுமே.

இப்போது, உங்களால் முடிந்தவரை பயபக்தியாக இருங்கள், கிறிஸ்தவ மக்கள் என்ற முறையில் பயபக்தியாக இருக்கும்படி நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். அங்கும் இங்கும் நகர வேண்டாம். அது என்னைத் தொந்தரவு செய்கிறது. பாருங்கள், இங்குள்ள ஒவ்வொரு நபரும் ஒரு ஆவி. அது உங்களுக்குத் தெரியுமா? "ஆமென்," சொல்லுங்கள்.

[சபை, "ஆமென்" என்கிறது.] நீங்கள் ஒவ்வொருவரும் ஒரு ஆவி, அப்படி இல்லாவிட்டால், நீங்கள் இங்கே இருக்க மாட்டீர்கள், நீங்கள் உயிரோடு இருக்க மாட்டீர்கள். புரிகிறதா? பின்னர், அந்த ஆவி அசையும்போது, அல்லது ஒரு குறுக்கீடு இருக்கும்போது, அது ஒரு போர். நாம் மாம்சத்தோடும் இரத்தத்தோடும் அல்ல, அதிகாரங்களோடு போராடுகிறோம்.

குணமடைந்து இறங்கிப் போக நீர் அனுமதிக்க வேண்டும் என்று நான் ஜெபிக்கிறேன்.

அதை அருளுங்கள், அன்பான தேவனே, இந்த வியாதி அவருடைய சரீரத்தை விட்டு நீங்கி, இன்றிரவு தொடங்கி இனி ஒருபோதும் அவரைத் தொந்தரவு செய்யாதிருக்கட்டும், இயேசு கிறிஸ்துவின் நாமத்தில். ஆமென்.

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, என் சகோதரனே. சில நாட்களில் என்னிடம் வந்து அறிவியுங்கள்; நீங்கள் அப்படிச் செய்வீர்களா?

*40* இப்போது, மக்களாகிய நீங்கள்— இப்போது புரிந்துகொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன். இப்போது இந்த மக்களைப் பாருங்கள். இப்போது உங்களால் கண்ணுக்குத் தெரியும் எந்தக் காரியங்களையும் பார்க்க முடியாது. செவிடர்கள் வரும்போதோ, அல்லது குருடர்களோ, அது நடப்பதை நீங்கள் பார்க்கிறீர்கள். இந்த மனிதரும் செவிடர்கள் அல்லது குருடர்களைப் போலவே குணமாக்கப் படுகிறார், பாருங்கள், அதேபோல்தான்.

சரி, வாருங்கள், ஐயா.



என்பதையும், அவர் அதைச் செய்வதாகச் சொன்னார் என்பதையும், அவர் தம்முடைய வார்த்தையில் உண்மையுள்ளவர் என்பதையும் நீங்கள் அறியும்போது, அது உங்களை நிற்கச் செய்கிறது. அந்த வார்த்தை நல்லதல்ல என்றால், தேவன் இல்லை. மேலும் அது முடியாவிட்டால்... என்னால் அதை நம்ப முடியாவிட்டால், அந்த பைபிளின் ஒவ்வொரு கட்டத்திலும் என் ஆத்துமாவை என்னால் தொங்கவிட முடியாவிட்டால், அது கொஞ்சமும் நல்லதல்ல. எனக்கு அதனுடன் எந்தத் தொடர்பும் இருக்க வேண்டாம். நான் அதற்கு எதிராக இருந்தால், நான் அதை விசுவாசிக்கவில்லை என்றால், இன்றிரவு நான் தேவனுக்கு எதிராக இருப்பேன். "அப்படி ஒன்று இல்லவே இல்லை" என்று சொல்வேன்.

7 ஆனால் அதன் ஒவ்வொரு வார்த்தையும் உண்மை என்று நான் விசுவாசிக்கிறேன், நீங்கள் அதன்பால் சரியான மனப்பான்மையைக் கொண்டிருந்தால், ஒவ்வொரு தெய்வீக வாக்குத் தத்தமும் அது என்ன செய்யும் என்று சொல்லியிருக்கிறதோ அதைச் சரியாக உருவாக்கும் ஒரு விதையாகும். இதை

நினைவில் கொள்ளுங்கள், தேவனுடைய எந்தவொரு தெய்வீக வாக்குத்தத்தத்தின் மீதான சரியான மனப்பான்மை அதை நிறைவேற்றும்.

அதை முயற்சித்து பாருங்கள். "முயற்சித்து பாருங்கள்" என்பதல்ல, அதைச் செய்யுங்கள். உங்களைத் தள்ளுவதற்கும், "என்னால் முடியும், தேவனுடைய கிருபையால், நான் அதைச் செய்வேன்" என்று சொல்வதற்கும் உங்களுக்குப் பின்னால் போதுமான அளவு உந்துதல் இருந்தால், தேவன் உங்களுடன் இருக்கிறார். ஆனால் நீங்கள் வெறும் ஊசலாடும் மனதுடன், "சரி, அவர்கள் எனக்காக ஏதாவது செய்ய முடியுமா என்று நான் மேலே சென்று பார்க்கிறேன்" என்று இருந்தால், இல்லை.

இங்கே அதிக காலத்திற்கு முன்பு இல்லை, ஒரு மனிதர் என் இடத்திற்கு வந்தார். அவர் சொன்னார், "சகோதரர் பிரன்ஹாம்," அவர் சொன்னார், "நான் சகோதரர் கோலின் கூட்டத்திற்குப் போனேன்" (நான் நம்புகிறேன்), "அவரால் எனக்கு எந்த நன்மையும் செய்ய முடியவில்லை" என்றார்.



என்பதை நான் அறிந்துகொள்வேன். அது சரிதானே? ஏனென்றால் தேவன் தமது ரகசியங்களைத் தமது தீர்க்கதரிசிக்கு வெளிப்படுத்துகிறார். அது உண்மைதானே? அது உண்மை என்று நீங்கள் விசுவாசிக்கிறீர்களா?

*39* நீங்கள்—நீங்கள் மிகவும் நோய்வாய்ப் பட்டிருக்கிறீர்கள், மேலும் நீங்கள் ஒரு—ஒரு—ஒரு—ஒரு இரத்த அழுத்தத்தால், அல்லது, குறைந்த இரத்த அழுத்தத்தால் அவதிப்பட்டு வருகிறீர்கள், மேலும் உங்களுக்கு ஒரு—ஒரு இருதய நோய் இருக்கிறது.

இந்த வருடம் நீங்கள் மருத்துவமனையில் இருந்தீர்கள் என்று சொல்லுங்கள், இந்த வருடம் மூன்று முறை, மேலும் ஏறக்குறைய மரிக்கக்கூடிய நிலையிலிருந்தீர்கள். அது உண்மையா? தேவன் ஒருவரால்தான் உங்கள் உயிரைக் காப்பாற்ற முடியும், என் சகோதரனே. ஒரு நிமிடம் இங்கே வாருங்கள்.

இரக்கமுள்ள பிதாவே, என் சிறிய சகோதரனுக்காக, மரத்தில் ஏறிய, குள்ளமாயிருந்த சகேயுவை நான் நினைத்துப் பார்க்கிறேன். அவர் இப்போது மறுபக்கமாகக்

செய்யக்கூடிய ஒரே காரியம். நீங்கள் அதை முழு இருதயத்தோடும் விசுவாசிக்கிறீர்களா?

மேலும் நீங்கள் விசுவாசிக்கிறீர்களா...? நீங்களும் நானும் அந்நியர்களாயிருக்கிறோம் என்பதை அறிந்திருந்து, என் சகோதரனே, மேலும் தேவன் அன்புள்ளவராகவும், தயவுள்ள வராகவும் இருந்து, உங்களுக்கு உதவ விரும்பினால், உங்களுக்கு உதவ அவர் என்னை அனுப்பியிருந்தால், என்னால் உங்களைக் குணமாக்க முடியாது, உங்களுக்குத் தெரியும், ஏனென்றால் அது...

தேவன் அதை ஏற்கெனவே செய்துவிட்டார். நான் செய்யக்கூடிய ஒரே காரியம், சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பது மட்டுமாகத்தான் இருக்கும், அது என் அழைப்பாக இருந்தால், சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க, வார்த்தையை விளக்கிக்கூற, அல்லது, அந்நியபாஷைகளில் பேசும் வரத்தைப் பெற்ற ஒருவனாக நான் இருந்தால், அர்த்தம் சொல்ல.

அல்லது நான் ஒரு தீர்க்கதரிசியாக இருந்தால், நான் புரிந்துகொள்வேன். அது சரிதானே? உங்களுக்கு என்ன குறை இருக்கிறது



மேலும் சொன்னார், "நான் சகோதரர் ஜாகர்ஸ் கூட்டத்திற்குப் போனேன்," "அவரால் எனக்கு எந்த நன்மையும் செய்ய முடியவில்லை. நான் சகோதரர் ராபர்ட்ஸ் கூட்டத்திற்குப் போனேன், அவரால் எனக்கு எந்த நன்மையும் செய்ய முடியவில்லை" என்றார். அவர் சொன்னார், "நீங்கள் எனக்கு உதவ முடியுமா என்று பார்க்க வந்தேன்."

நான் சொன்னேன், "நீங்கள் அதே வழியில்தான் திரும்பிப் போகப் போகிறீர்கள், பாருங்கள்." நான் சொன்னேன், "நீங்கள் தவறான மனிதனிடம் செல்கிறீர்கள்." நான் சொன்னேன், "நீங்கள் மனிதனிடம் செல்கி றீர்கள், உங்களுக்கு உதவக்கூடிய தேவனிடம் செல்லுங்கள்." நான் சொன்னேன், "இந்த மனிதர்கள் சரியானவர்கள்தான், சகோதரர் கோல், சகோதரர் ராபர்ட்ஸ், மற்றும் ஜாகர்ஸ் மற்றும் அந்தச் சகோதரர்கள், அவர்கள் நல்ல மனிதர்கள் மற்றும் அவர்கள்—அவர்கள் தேவபக்தியுள்ள மனிதர்கள்; ஆனால் அவர்கள் மனிதர்கள். கிறிஸ்துவிடம் செல்லுங்கள், அவரே அதைச் செய்தவர். சகோதரர் ஜாகர்ஸ் உங்களுக்காக ஒருபோதும் மரிக்கவில்லை.

சகோதரர் ஜாகர்ஸின் தழும்புகளால் நீங்கள் குணமாக்கப்படவில்லை, அல்லது சகோதரர் ராபர்ட்ஸால் அல்ல. கிறிஸ்துவின் தழும்புகளால் நீங்கள் குணமானீர்கள். அவர்கள் வெறும் மனிதர்கள், ஊழியர்களாக அதை உங்களுக்குச் சுட்டிக்காட்டுகிறார்கள்." நான் சொன்னேன், "நான் செய்யக்கூடியது அவ்வளவுதான், உங்களைச் சுட்டிக்காட்டுவது..."

மேலும் தேவனுடைய எந்தவொரு உண்மையான தெய்வீக ஈவும் ஒவ்வொரு மீட்பிற்கும், மீட்பின் ஆசீர்வாதத்திற்கும் கல்வாரியே தேவனுடைய முடிந்துபோன கிரியைகள் என்பதை எப்போதும் அங்கீகரிக்கும். அங்கேதான் அவர் நம்முடைய மீறுதல் களினிமித்தம் காயப்பட்டார். அங்கேதான் அவர் நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் நொறுக்கப் பட்டார். அங்கேதான் நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது. அங்கேதான் தழும்புகள் நம்மைக் குணமாக்கின. இந்தக் கட்டடத்தில் இன்றிரவு இருக்கும் ஒவ்வொரு ஆணும் பெண்ணும் தேவனுடைய பார்வையில் ஏற்கனவே குணமாக்கப் பட்டுவிட்டார்கள் என்று தேவனுடைய



இப்போது, என் சகோதரனே, நீங்கள் இந்தப்பக்கம் பார்க்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மேல் உங்கள் முழு இருதயத்தோடும் விசுவாசிக் கிறீர்களா? எங்களோடு? மேலும் உங்களுக்கு உதவிசெய்ய, அவருடைய ஊழியனாகிய என்னை அவர் அனுப்பியிருக்கிறார் என்று நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? விசுவாசிக்கிறீர்கள். அப்படியானால், நாம் ஒருவருக்கொருவர் அந்நியர்கள்தானே?

ஆனால் உங்களுக்குத் தெரியும் அது—அது ஒரு மனிதன் கடந்து செல்வதைப் போல... பாருங்கள், ஏதாவது சொல்லப்படும்போது நான்—நான்... அந்த கண்ணாடி வெளிச்சத்தைக் கொடுப்பதைவிட வேறு எந்த வகையிலும் நான் பேசுவதில்லை. அந்த மின்சாரம்தான் வெளிச்சத்தைக் கொடுக்கிறது, பாருங்கள்.

கண்ணாடியிடம் ஒன்றுமில்லை, அது—அது வெளிச்சத்தை பிரதிபலிக்க மட்டுமே செய்கிறது. மேலும் "சொல்" என்று அவர் சொல்வதையோ, அல்லது, அவர் எடுத்துக்கொள்ளும் காரியத் தையோ பிரதிபலிப்பது மட்டும்தான் நான்

இணைந்து கேட்கிறோம்; இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் கேட்கிறோம். ஆமென்.

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, சகோதரனே. நீங்கள், எங்களுக்காக வந்து சாட்சி கூற வேண்டும் என்றும், தேவன் உங்களுக்கு என்ன செய்தார் என்பதை சில—சில நாட்களுக்குப் பிறகு, இரண்டு அல்லது மூன்று நாட்களுக்குப் பிறகு திரும்பி வந்து, என்ன நட-... என்ன நடந்தது என்பதை எங்களுக்குத் தெரிவிக்க வேண்டும் என்றும் நான் விரும்புகிறேன். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, சகோதரனே.

*38* நீங்கள் என்னோடு விசுவாசிக்கிறீர்களா? தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, சகோதரனே. இப்போது, பில்லி எங்கே? அந்தப் பையன்... இது—இது நீங்கள் கூட்டிக்கொண்டு வந்த நோயாளியா? சரி.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து ஆச்சரிய மானவர். அவர் தமது மகிமையில், நமக்காக எவ்வளவு மிகவும் அதிகமாய், பரிபூரணமாக, மகத்தான, வல்லமையான கிரியைகளையும் அற்புதங் களையும் செய்திருக்கிறார்.



வார்த்தையின் அதிகாரத்தில் என்னால் இதைச் சொல்ல முடியும்.

*8* அவருடைய தழும்புகளால், நாம் குணமானோம்: குணமானோம் என்பது இறந்தகாலம், அது சரியா, சகோதரர்களே? நாம் குணமாக்கப்பட்டோம். எப்போது? ஆயிரத்துத் தொள்ளாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு. உலகில் உள்ள ஒவ்வொரு பாவியும் அவர்கள் செய்த ஒவ்வொரு பாவத்திலிருந்தும் ஆயிரத்துத் தொள்ளாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மன்னிக்கப்பட்டார்கள். அது சரியா? அவர்—அவர் உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி, அது சரியா? அப்படியானால் ஆயிரத்துத் தொள்ளாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு அங்கே எல்லோரும் மன்னிக்கப்பட்டார்கள், ஆனால் நீங்கள் அவரை உங்கள் தனிப்பட்ட இரட்சகராக ஏற்றுக் கொள்ளும் வரை அது உங்களுக்கு எந்த நன்மையையும் செய்யாது. பின்னர் நீங்கள் அதை ஏற்றுக்கொள்ளும்போது, இயேசு வந்து மீண்டும் ஒருவருக்காக மரிப்பதில்லை, பாருங்கள். அவர் ஒருமுறை மட்டுமே மரித்தார். நமது—நமது இரட்சிப்பை, அதாவது

கல்வாரியில் அவர்—அவரது முடிந்துபோன கிரியைகளை நாம் ஏற்றுக்கொள்கிறோம். பின்னர், இப்போது அவருடைய தழும்புகளால் நாம் குணமானோம். ஒவ்வொரு முறையும் அவர் இறங்கி வந்து நம்மைக் குணமாக்குவதில்லை என்பதை நாம் அறிவோம், நாம் அதிலே... அது உங்கள் சொந்த தனிப்பட்ட விசுவாசத்தை எடுத்துக்கொள்கிறது.

விசுவாசத்தின் வரங்களைப் பற்றி... குணமாக்கும் வரங்களைப் பற்றி மக்கள் பேசுவதை நான் கேட்டிருக்கிறேன். நிச்சயமாக பைபிள் குணமாக்கும் வரங்களைப் பேசுகிறது, ஆனால் இந்த குணமாக்கும் வரம் என்றால் என்ன? மற்றொருவரைக் குணமாக்க ஒரு மனிதனுக்கு ஒரு வல்லமை கொடுக்கப் படுகிறதா? இல்லை ஐயா. ஒரு மனிதனும் மற்றொருவரைக் குணமாக்க முடியாது, ஒருபோதும் முடியாது. மேலும் உலகில் நமக்குக் கிடைத்த எல்லா மருந்துகளும் ஒருபோதும் யாரையும் குணமாக்கியதில்லை, ஒருபோதும் யாரையும் குணமாக்காது. இப்போது, உங்களில் பலர் அதில் என்னுடன் உடன்படவில்லை என்பதை நான் அறிவேன்,



அதன் ஒவ்வொரு வார்த்தையும் உண்மையா? [சகோதரர் சில நிமிடங்கள் பேசுகிறார், நிலையை விளக்குகிறார், அறுவை சிகிச்சையின் செலவு ஐந்நூறு டாலர்கள் என்று கூறுகிறார்.] தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. இங்கே வாருங்கள், என் சகோதரனே.

எங்கள் பரம பிதாவே, கடுமையாக நோய்வாய்ப்பட்டிருக்கும் என் சகோதரனுக்கு இரக்கமாயிரும்; மற்ற எவரைப்போலவே இவருக்கும் வாழ்க்கை முக்கியமானதே. நீர் அவருக்கு உதவுவீர் என்று விசுவாசித்து, உண்மையான விசுவாசத்துடன் அவர் வந்திருக்கிறார். உம்முடைய ஊழியனாக, நம்முடைய கர்த்தராகிய இயேசுவின் வார்த்தையை நினைவுகூரும் வகையில், நான் அவர்மீது என் கைகளை வைத்து, அவருடைய சுகத்திற்காகக் கேட்கிறேன்.

தேவனே, அவருடைய வியாதி, அல்லது உபத்திரவம், அவரைப் பிடித்திருப்பது எதுவாக இருந்தாலும், அது அவரை விட்டு விலகட்டும், அவர் சுகமாக்கப்படட்டும். இந்த ஆசீர்வாதத்தை, சபையாகிய நாங்கள் ஒன்றாக

தொண்டையின் பக்கவாட்டில் உள்ள ஒரு பை போன்ற பகுதியாகும். மேலும் அது... அவர் அறுவை சிகிச்சை செய்ய விரும்புகிறார், ஆனால் அறுவை சிகிச்சை உங்களுக்கு மிகவும் செலவு பிடிப்பதால், அல்லது, அறுவை சிகிச்சைக்கு உங்களால் அதைச் செய்ய முடியவில்லை.

மேலும் அது நகர்ந்தால் ஆபத்து என்றும், அது உங்களைக் கொல்லும், அது உங்களின் உயிரை வாங்கும் என்றும் அவர் உங்களிடம் சொல்கிறார், அது... அது—அது உண்மையா? இப்போது, செய்ததா... நீங்கள் கேட்டீர்கள், அது என் குரல்தான். நான்தான் பேசிக் கொண்டிருந்தேன். அது என்னுடைய சத்தம்தான், ஆனால் பேசியது நான் அல்ல.

*37* இப்போது, அது எதுவாக இருந்தாலும், அது என்னவென்று எனக்குத் தெரியாது, ஏனென்றால் அது வேறொரு பரிமாணம், புரிகிறதா. அது வேறொரு உலகம். ஆனால் அது உண்மையா? அப்படியானால் உங்கள்... [சகோதரர், "உண்மை." என்கிறார்]



ஆனால் நான் உங்களிடம் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். ஒரு நிமிடம் இந்த வழியைப் பாருங்கள், மேலும் பயபக்தியாக இருங்கள்.

உதாரணமாக, இன்றிரவு என் கையை நான் வெட்டிக்கொண்டால் என்ன செய்வது, என் கையில் உள்ள அந்த வெட்டைக் குணமாக்க உலகத்தில் போதுமான மருந்து இல்லை. என் கையில் உள்ள அந்தக் கத்தி வெட்டைக் குணமாக்கும் எந்தவொரு மருந்தும், என் கோட்டில் உள்ள ஒரு கத்தி வெட்டைக் குணமாக்கும், இந்த மேஜையில் உள்ள ஒரு கத்தி வெட்டைக் குணமாக்கும். "சரி," நீங்கள் சொல்கிறீர்கள், "சகோதரர் பிரன்ஹாம், மருந்து உங்கள் கோட்டுக்காகவோ மேஜைக்காகவோ தயாரிக்கப்படவில்லை. அது உங்கள் சரீரத்திற்காகத் தயாரிக்கப்பட்டது."

சரி, இன்றிரவு நான் என் கையை வெட்டிக்கொண்டு, நான் கீழே விழுந்து இறந்துவிட்டால் என்ன செய்வது. மேலும் அவர்கள் என் சரீரத்தை ஒரு திரவத்தால் பதப்படுத்துவார்கள், என்னை ஐம்பது ஆண்டுகளுக்கு இயற்கையாகத் தோன்றச்

செய்வார்கள். அவர்கள் ஒவ்வொரு நாளும் வந்து, எனக்கு ஒரு பெனிசிலின் ஊசி போடட்டும், அதைத் தைக்கட்டும், எனக்கு பெனிசிலின் கொடுக்கட்டும், தொற்றுகளை வெளியே வைத்திருக்கட்டும், அது பரவாயில்லை. இன்றிலிருந்து ஐம்பது வருடங்களில், அந்த வெட்டு அது அங்கு ஏற்படுத்தப்பட்ட நாளில் எப்படி இருந்ததோ அப்படியே இருக்கும்.

"சரி," நீங்கள் சொல்கிறீர்கள், "நிச்சயமாக, சகோதரர் பிரன்ஹாம். அது சரிதான்."

சரி, அது ஏன் குணமாவதில்லை? பெனிசிலின் ஏன் அதைக் குணமாக்குவதில்லை? களிம்பு மற்றும் மெர்த்தியோலேட் மற்றும் நீங்கள் போடும் மற்ற அனைத்தும், ஏன் அதைக் குணமாக்குவதில்லை? உலகில் திசுக்களை உருவாக்கக்கூடிய ஒரு களிம்பு இல்லை, ஒரு பெனிசிலின் இல்லை, எதுவும் இல்லை. நீங்கள் சொல்கிறீர்கள், "உங்கள் சரீரத்திலிருந்து ஜீவன் போய்விட்டது." அது சரிதான். அப்படியானால், எது, மருந்து குணமாக்குபவராக இருந்தால், மருந்து எதுவாக இருந்தாலும் குணமாக்கும்,



மேலும் உங்கள் ஆவி அந்த ஆவியானவருக்குக் கீழ்ப்படிந்திருக்கிறது. இப்போது, அங்கே... நான் அவருடைய ஊழியனாய் இருந்து, இப்போது நான் அவருடைய ஆவியானவரால் அபிஷேகம் பண்ணப்பட்டால், மற்றும் நீங்கள்...

உங்களுக்கு ஏதோ பிரச்சனை இருந்தால், நிச்சயமாக, அந்த ஆவியானவர் உங்களுக்கு உதவ முயற்சிப்பார், ஏனென்றால் இவையெல்லாம் கிறிஸ்துவுக்குள் இருக்கிறது. அது சரிதானே?

36 நீங்கள்—நான் தேவன் மூலமாக இதைச் செய்ய முடியும் என்று நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? நீங்கள் விசுவாசிக்கிறீர்கள். உங்களுக்கு—நீங்கள் ஒரு மருத்துவரிடம் போயிருக்கிறீர்கள். என்னை விட்டு திரும்பி நிற்கும் ஒரு மனிதனை நான் பார்க்கிறேன், ஒரு—ஒரு மருத்துவர், அவர் உங்களைப் பரிசோதித்துக்கொண்டிருக்கிறார்.

அது—அது தொண்டையில் ஏதோ ஒன்று இருக்கிறது. இது உங்கள் தொண்டையில் உள்ள ஒரு நிலை. அது ஒரு—உமிழ்நீர் உங்கள் தொண்டைக்குள் செல்லும் இடத்தில், உங்கள்

அவருக்கு எவ்வளவு அதிகமாகத் தெரிந்திருக்கும். அவருக்குத் தெரியும், அல்லவா? நிச்சயமாக, அவருக்குத் தெரியும்.

*35* இப்போது, ஏதோ நடக்கிறது என்பதை நீங்கள் உணர்ந்திருக்கிறீர்கள். அது—அது இப்போது, அது இதுதான், அது பரிசுத்த ஆவியானவர். இப்போது, இந்த மனிதர் முற்றிலும் ஒரு அந்நியர், ஆனால் இதே விநாடியில், கர்த்தருடைய தூதன் நான் நிற்கும் இடத்திற்கு நேராக இறங்கி வந்திருக்கிறார். நீங்கள் அதை உணர்ந்திருக்கிறீர்கள், அல்லவா? ஏதோ நடக்கிறது என்பதை. இப்போது, அது வெறும் அவருடைய பிரசன்னம்தான்.

நீங்கள் எப்போதாவது அதின் படத்தைப் பார்த்திருக்கிறீர்களா? அந்த வெளிச்சத்தை? வாஷிங்டன், டி.சி.-யில் அவர்கள் எடுத்தார்கள்; சிறிது காலத்திற்கு முன்பு இங்கே எடுத்தார்கள். அது—அதைத்தான் இப்போது நீங்கள் உணர்கிறீர்கள்.

உண்மையில் நீங்கள் ஒரு கிறிஸ்தவர் என்பதால், மறுபடியும் பிறந்த கிறிஸ்தவர் என்பதால் அப்படி இருக்கிறது. மேலும்—



அது குணமாக்குபவராக இருந்தால், அது இல்லை, அது ஜீவனை எடுக்காது. ஆனால் ஜீவன்தான் குணமாக்குபவர்; ஜீவன் என்றால் என்ன என்று நீங்கள் எனக்குச் சொன்னால், தேவன் யார் என்று நான் உங்களுக்குச் சொல்வேன். ஏனென்றால் தேவன் ஜீவனாயிருக்கிறார். ஜீவன்தான் குணமாக்குதலைச் செய்கிறது.

*9* இப்போது, நீங்கள் மருந்தை நிராகரிக்க வேண்டாம், மருந்து அதைச் சுத்தமாக வைத்திருக்கிறது, அதேவேளையில் ஜீவ-... தேவன் குணமாக்குதலைச் செய்கிறார். நான் என் கையை உடைத்துக்கொண்டு, இறந்துபோனால், அவர்கள் வந்து என் கையைச் சரிசெய்து, அதன் மீது கட்டுகளைப் போட்டு, அதை அங்கேயே வைத்தால்; என் சரீரத்திலிருந்து ஜீவன் போய்விட்டால், இப்போதிலிருந்து நாற்பது வருடங்களில், அந்தக் கை உடைந்தபோது எப்படி இருந்ததோ அதே போல உடைந்திருக்கும். ஆனால் மருத்துவர் எலும்புகளை இடத்திலே வைக்கிறார், ஆனால் தேவன் குணமாக்குதலைச் செய்கிறார், ஜீவன். ஆமென்.

நான் எனக்கே "ஆமென்" சொல்லிக் கொள்ளவில்லை, ஆனால் நீங்கள் அதைச் சொல்லாவிட்டால், நான் சொல்வேன். நான்—நான்—நான் விசுவாசிக்கிறேன், நான் ஒரு பழைய பாணியிலான, ஒரு... நான்—நான் பழைய காலத்து, இருதயப்பூர்வமான, வானம்-நீலமான, பாவத்தைக் கொல்லும் மார்க்கத்தை விசுவாசிக்கிற ஒரு பழைய பாணியிலான, காட்டுப்புறத்துப் பிரசங்கி. அது சரிதான். அது பழைய பாணியிலான வழியை விசுவாசிக்கிறது. மேலும் ஒரு மனிதன் தேவனால் பிறக்கும் போது, அவன் தேவனுடைய குமாரனாகிறான், தேவனுடைய இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமை அவனில் வாசம் செய்கிறது என்று நான் விசுவாசிக்கிறேன். நமக்கு ஒரு இயற்கைக்கு அப்பாற்பட்ட தேவன் இருக்கிறார். நமக்கு ஒரு இயற்கைக்கு அப்பாற்பட்ட ஜீவன் இருக்கிறது, நமக்கு ஒரு... இயற்கைக்கு அப்பாற்பட்ட ஆவியானவரால் பிறந்த எந்த மனிதனும் இயற்கைக்கு அப்பாற்பட்டதை விசுவாசிக்கிறான் என்று நான் விசுவாசிக்கிறேன். நமக்கு இயற்கைக்கு அப்பாற்பட்ட உயிர்த்தெழுதல் கிடைத்தது. நமக்கு இயற்கைக்கு



அபிஷேகத்திற்காகத்தான். நான், அவர் இல்லாமல், நான்... அவர் எனக்கு வெளிப் படுத்தாவிட்டால், நான் சும்மா...

இப்போது நான் என்ன செய்கிறேனோ அதைத் தவிர வேறெதுவும் இந்த மனிதரிடம் என்னால் பேச முடியாது. ஆனால், தேவன் ஏதாவது செய்ய வேண்டும்; இந்த நேரத்தில் அவர் எங்கே இருக்கிறார் என்று என்னால் உணர முடியவில்லை. பிரசங்கத்திலிருந்தும் ஆராதனை யிலிருந்தும் என் மனதை மாற்றி, உங்களுடன் பேசுவதற்கு—அமைதிப்படுவதற்காகத்தான் நான் உங்களிடம் பேசிக்கொண்டிருக்கிறேன்.

இப்போது, ஆனால் அவர்—அவர் நம்மைப் பார்க்கிறார் என்று எனக்குத் தெரியும், ஏனென்றால், "உங்கள் பரம பிதாவின் சித்தமில்லாமல் ஒரு அடைக்கலான் குருவிகூட தரையில் விழாது" என்று அவர் சொன்னார். ஒரு குருவியின் மரணமே அவருக்குத் தெரிந்தி ருக்குமானால், மக்கள் நின்று ஜெபிக்கும் போதும், முழு சபையாரும் ஒன்றாகக் கூடி ஜெபிக்கும்போதும் இந்த நேரத்தைப் பற்றி

அதை ஒப்புக்கொள்ள வேண்டும். மேலும் அது உண்மையா இல்லையா என்பது உங்களுக்குத் தெரியும்.

உங்கள் வாழ்க்கை எப்படி இருந்தது என்று அவர் உங்களிடம் சொன்னால், உங்கள் வாழ்க்கை எப்படி இருக்கும் என்பதையும் அவர் உங்களுக்குச் சொல்வார். மேலும் என்ன நடந்தது என்பது உண்மையாக இருக்குமானால், நீங்கள் அது உண்மை என்று அறிவீர்கள், எப்போ-... அது உண்மையா இல்லையா என்பது உங்களுக்குத் தெரியும்.

என்ன நடக்கும் என்பதை அவர் உங்களிடம் சொன்னால், என்ன நடந்தது என்பதை அறிந்தவர், நிச்சயமாக என்ன நடக்கும் என்பதையும் அறிவார் என்று விசுவாசிக்க உங்களுக்கு நம்பிக்கை உண்டாகும். அது சரிதானே? அது—அது உண்மை, நீங்கள்—நீங்கள் அதை அறிய வேண்டும்.

*34* இப்போது, நிச்சயமாக, நான் காத்திருக்கிறேன், தாமதப்படுத்துகிறேன் என்று சபையில் உள்ள எவருக்கும் தெரியும். அது இதுதான்; இது பரிசுத்த ஆவியானவரின்



அப்பாற்பட்ட பரலோகம் கிடைத்தது. நமக்கு இயற்கைக்கு அப்பாற்பட்ட இரகசிய வருகை இருக்கும். முழு காரியமும் இயற்கைக்கு அப்பாற்பட்டதைச் சுற்றித்தான் கட்டப் பட்டிருக்கிறது என்று நான் விசுவாசிக்கிறேன்.

மேலும் ஒரு மனிதன் தேவனுடைய ஆவியால் பிறந்தால், அவன் இயற்கைக்கு அப்பாற்பட்டதை விசுவாசிக்கிறான், அவனால் அதைச் செய்யாமல் இருக்க முடியாது, ஏனென்றால் அவன் தேவனுடைய குமாரன். அதனால் தான் இன்றிரவு நமக்கு இத்தனை பழைய, குளிரான, சம்பிரதாயமான, அலட்சியமான, தேவனால் கைவிடப்பட்ட, பின்வாங்கிப்போன சபைகள் இருக்கின்றன, ஏனென்றால் ஆண்களும் பெண்களும் தேவனுடைய ஆவியால் பிறக்கவில்லை. அவர்களுக்குத் தேவனின் ருசி இல்லை. அவர்களுக்குத் தேவனைப் பற்றி எதுவும் தெரியாது, அவர்களுக்குத் தெரிந்ததெல்லாம் இறையியல்தான். அதனால்தான் உங்களால் அவர்களை ஒரு காரியத்தையும் விசுவாசிக்கச் செய்ய முடிவதில்லை. அது முற்றிலும் சரி.

*10* அவர் விசுவாசிப்பதற்கு முன்பு, நீங்கள் மனிதனின் இருதயத்தில் அவரை முதலில் சரிசெய்ய வேண்டும். விசுவாசிப்பதற்கு அவரிடம் எதுவும் இல்லை. அவர் எதைக் கொண்டும் விசுவாசிக்க முடியாது. மனிதனின் சிறிய, குழந்தையைப் போன்ற மூளைக்கு விசுவாசத்தைப் பற்றி எதுவும் தெரியாது என்று நான் உறுதியாக நம்புகிறேன். அவருடைய விசுவாசத்தைத் தூண்டி, அவரை அவருடைய சிருஷ்டிகரை நோக்கிப் பார்க்கச் செய்து, "ஃபூ!" என்று தமது கையிலிருந்து சந்திரனையும் நட்சத்திரங்களையும் ஊதிவிட்ட அதே தேவன் எல்லாவற்றையும் செய்ய முடியும் என்று விசுவாசிக்கச் செய்யும் ஏதோவொன்று அவனுக்குள்ளே இருக்க வேண்டும். இந்த உலகம் விசுவாசத்தால் உருவாக்கப்பட்டது. தேவன் பேசி உலகத்தை இருப்புக்குக் கொண்டுவந்தார். இன்றிரவு நாம் அமர்ந்திருக்கும் இந்த உலகம் வேறு எதுவுமில்லை, ஆனால் தேவனுடைய வார்த்தை பொருளாக உருவெடுத்ததேயாகும். அப்படி இல்லையென்றால், அதை உருவாக்க அவருக்கு எங்கே பொருள் கிடைத்தது?



என்றென்றைக்கும் மாறாதவராக விசுவாசிப்பீர்கள். அது சரிதானே? (சரி.)

*33* இப்போது, ஐயா, நீங்களும் நானும் ஒருவருக்கொருவர் அந்நியர்கள். என் வாழ்நாளில் நான் உங்களை பார்த்ததே இல்லை, பார்த்திருக்கிறேனா? நாம் முற்றிலும் அந்நிய-...அது சரிதானே? அப்படியானால் கையை உயர்த்துங்கள்... நாம் ஒருவரையொருவர் பார்த்ததே இல்லை.

உங்களைப்பற்றி நான் எதையும் தெரிந்துகொள்ள எந்த வழியும் இல்லை; இந்த உலகத்தில் ஒன்றுமே இல்லை. நாம் ஒருவேளை மைல்கள் தொலைவில் பிறந்திருக்கலாம், எனக்கு உங்களைத் தெரியாது, உங்களுக்கு என்னைத் தெரியாது, அது வெறும்... அது... நாம் இங்கே சந்தித்த இரண்டு மனிதர்கள் அவ்வளவுதான்.

இப்போது, தேவன் உங்களுக்கு வெளிப்படுத்தும் ஏதாவது ஒன்று இருக்குமானால், அது ஏதோ ஒரு இயற்கைக்கு அப்பாற்பட்ட மூலத்திலிருந்துதான் வர வேண்டும் என்பதை நீங்கள் அறிவீர்கள். நீங்கள்

அவள் சொன்னாள், "நீர் தீர்க்கதரிசி என்று காண்கிறேன்." பின்பு அவள் பட்டணத்திற்குப் போய், "நான் செய்த எல்லாவற்றையும் எனக்குச் சொன்ன ஒரு மனுஷனை வந்துபாருங்கள்; இவர் கிறிஸ்துதானோ?" என்றாள்.

மேலும் அவர் உள்ளே வந்தார், அவர் அந்தப் பட்டணத்தில் எந்த அற்புதமும் செய்யவில்லை. அவர் அவர்களோடு பேசி, அவர்களுக்கு விளக்கினார், மேலும் அவர்கள் அனைவரும் அவர் தேவனுடைய குமாரன் என்று அவர்மேல் விசுவாசம் வைத்தார்கள் (அது சரிதானே?).

*32* இப்போது, அவர் மரித்தோரிலிருந்து எழுந்திருந்தாரானால், அவர் அதே காரியத்தைச் செய்வார். இப்போது, நான் இந்த மனிதரிடம் பேச விரும்புகிறேன். பிரசங்கத்திற்குப் பிறகு இங்கே இருக்கும் முதல் நபர் இவர்தான். இப்போது, இயேசுகிறிஸ்து இன்றிரவு வந்து, அந்த ஸ்திரீக்கோ, அல்லது பிலிப்புவுக்கோ, அல்லது மற்ற எவருக்குமோ செய்த அதே காரியத்தை இந்த மனிதருக்கும் செய்வாரானால், நீங்கள் அவரை நேற்றும், இன்றும்,



அவர், "உண்டாகக்கடவது..." என்றார். அப்படியே உண்டாயிற்று. தேவனுடைய ஒவ்வொரு வார்த்தையும் அப்படியே இருக்க வேண்டும். அவர் தேவன், அவர் தமது வார்த்தையைக் காத்துக்கொள்ள வேண்டும். நீங்கள் எந்தவொரு தெய்வீக வாக்குத் தத்தத்தையும் உங்கள் இருதயத்தில் எடுத்துக் கொண்டு, "அது எனது தனிப்பட்ட சொத்து. அது எனக்குச் சொந்தமானது. நான் ஒரு விசுவாசி," என்று சொல்லுங்கள். அந்த அடிப்படையில் அதை ஏற்றுக்கொண்டு, அது என்ன செய்யும் என்று பாருங்கள். அது புற்றுநோய்களை விலகச் செய்யும். அது குருட்டுக் கண்களைத் திறக்கச் செய்யும். அது முடவர்களை நடக்கச் செய்யும். அது செவிடர்களைக் கேட்கச் செய்யும். நான் எதைப் பற்றி பேசுகிறேன் என்பது எனக்குத் தெரியும், ஏனென்றால் இப்போது பல ஆண்டுகளாக, உலகம் முழுவதும் நான் அதை ஒரு சோதனைக்கும் அனுபவத்திற்கும் உட்படுத்தியி ருக்கிறேன்; அதைப் பற்றி முழு உலகத்திற்கும் தெரியும்.

*11* ஆனால் இதில் உள்ள பிரச்சனை என்னவென்றால், ஆண்களும் பெண்களும் இந்த உலகில் பிறக்கிறார்கள், சிலர் கண்டனத்திற்குள்ளாகவே பிறக்கிறார்கள், நீங்கள் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறீர்கள், அது வாத்தின் முதுகில் தண்ணீர் ஊற்றுவது போலிருக்கிறது. அது அப்படியே கீழே ஓடிவிடுகிறது, எந்த... எந்தப் பலனும் இல்லை, அதுதான் உண்மை. தேவனுடைய வாக்குத்தத்தத்தைப் பற்றிக்கொண்டு, "இது என்னுடைய சொந்தச் சொத்து..." என்று சொல்லக்கூடிய ஆண்களும் பெண்களும்... தேவனுடைய ஆவியானவரால் பிறந்த ஒவ்வொரு மனிதனுக்கும் இயேசு கிறிஸ்துவால் ஒரு காசோலை புத்தகம் கொடுக்கப்பட்டிருக்கிறது, ஒவ்வொரு காசோலையிலும் அவருடைய பெயர் கையெழுத்திடப்பட்டிருக்கிறது. அதை நிரப்ப நீங்கள் பயந்தால், அது உங்களுடைய துரதிர்ஷ்டம். அதுதான் உண்மை.

சகோதரனே, எதுவானாலும்... இயேசு சொன்னார், "நீங்கள் ஜெபம்பண்ணும்போது எவைகளைக் கேட்டுக்கொள்வீர்களோ, அவைகளைப் பெற்றுக்கொள்வோம் என்று



அவர்... முதலில் அவர்... செய்த காரியம், "எனக்குக் குடிக்கத் தா" என்றார்.

அதற்கு அவள், "யூதர்கள் சமாரியருடனே சம்பந்தங்கலவாதவர்களானபடியால் இது வழக்கமில்லையே" என்றாள்.

அவர் சொன்னார், "ஆனால் நீ யாரிடம் பேசிக்கொண்டிருக்கிறாய் என்று நீ அறிந்திருந்தாயானால், நீயே என்னிடம் குடிக்கக் கேட்டிருப்பாய்."

"ஏன்," என்று அவள் சொன்னாள், "கிணறும் ஆழமாயிருக்கிறதே, மொண்டுகொள்ள உம்மிடத்தில் ஒன்றுமில்லையே." அவளுக்கு என்ன குறை இருக்கிறது என்பதை அவர் சரியாகக் கண்டுபிடித்து, அவளுடைய பிரச்சனை என்னவென்று அவளுக்குச் சொல்லும் வரை அந்த உரையாடல் தொடர்ந்தது. அது சரிதானே?

எத்தனை பேர் அதை விசுவாசிக்கிறீர்கள்? எல்லா கிறிஸ்தவர்களும். அவளுடைய பிரச்சனை எங்கே இருக்கிறது என்று அவர் அவளிடம் சொன்னார். மேலும் அவள் சொன்னாள்... அவள் என்ன சொன்னாள்?

மரித்தோரிலிருந்து எழுந்து இன்றிரவு அவர் நமக்குள்ளே வாழ்கிறார் என்றால், அவர் தமது சபையில் வாழ்கிறார் என்றால், அவரிடமிருந்து எதையும் மறைக்க முடியாது, ஏனென்றால் அவர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறார். அவர் இந்த மனிதனை அறிந்திருப்பார், அவர் உங்களை அறிந்திருப்பார், அவர் எல்லாரையும் அறிந்திருப்பார். அது சரிதானே? ஆகையால், அவரிடமிருந்து மறைக்கப்படக்கூடியது—மறைக்கப்படக்கூடியது ஏதுமில்லை.

*31* இப்போது, நான் உங்களிடம் ஒன்றை கேட்க விரும்புகிறேன். நீங்கள் உங்கள் முழு கவனத்தையும் கொடுத்து, இந்தப்பக்கமாக பார்க்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். நீங்கள் ஜெபிக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். நீங்கள் உண்மையாக இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

நான் இந்த மனிதரிடம் சற்று நேரம் பேசும்போது, நீங்கள் முழு இருதயத்தோடும் தேவனை விசுவாசிக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். இப்போது, போதகர் அந்த ஸ்திரீயைக் கிணற்றண்டையில் சந்தித்தபோது,



விசுவாசியுங்கள், அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும். நீங்கள் விசுவாசித்தால், எதுவாக இருந்தாலும், எவைகளாக இருந்தாலும்.”

எனக்கு சுகம் தேவைப்பட்டால், நான் அந்த காசோலையை எழுதி, அதை வைப்புத் தொகையாகப் போட்டு, “நான் இதைக் கல்வாரிக்கு அனுப்புகிறேன்” என்று சொல்வேன். அங்குதான் அதற்கான விலை கிரயமாகச் செலுத்தப்பட்டது, அங்குதான் நீங்கள் அதை டெபாசிட் செய்ய வேண்டும். அல்லேலூயா. உங்களுக்குத் தெரிந்த முதல் காரியம், ஆசீர்வாதங்கள் திரும்பப் பாய்ந்து வரும், வியாதி மறைந்துவிடும். நான் சுகமடைந்து மீண்டும் களிகூருவேன். ஆமென்.

*12* இங்குள்ள ஓவன்ஸ்பரோவுக்கு என்ன தேவையென்று உங்களுக்குத் தெரியுமா? ஒரு நல்ல பழைய காலத்து, தேவனால் அனுப்பப்பட்ட, பரிசுத்த ஆவியின் எழுப்புதல் தேவை; நீங்கள் பெறுவதற்கு முன்பு... அதுதான் சரி. அதன்பிறகு நீங்கள் ஒரு சுகமளிக்கும் கூட்டத்தை நடத்தலாம், அது முற்றிலும் சரி.

நான் உங்களுக்குச் சொல்கிறேன், இந்த உலகம்... என் வாழ்க்கையில் நான் பார்த்ததிலேயே அமெரிக்கா மிகவும் சீர்கெட்ட நிலைகளில் ஒன்றில் இருக்கிறது. இந்த உலகில் ஏதாவது ஒரு இடத்திற்கு மிஷனரிகள் தேவையென்றால், அது அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்குத்தான். படிக்காத ஒருவனை விட படித்த ஒரு புறஜாதியானைக் கையாள்வது மிகவும் கடினமானது. டாக்டர் பாஸ்வொர்த், அதைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? அவன் படித்துவிட்டான், அவன் நிற்பான், தேவனுடைய அற்புதங்களைப் பார்ப்பான், பின் அவன் சொல்வான், "சரி, அது இறையியல் என்றும், அது மனதின் மூலம் எண்ணங்களைப் பரிமாறும் முறை என்றும் டாக்டர் இன்னார் சொன்னார். சரி, அது பிசாசு என்று நான் நம்புகிறேன்."

அதுபோலவே பெருமையடித்துக்கொண்டு அங்கே உட்கார்ந்திருக்கிறார்கள்... இந்த தேசத்தின் மீது கண்டனமும் நியாயத்தீர்ப்பும் தொங்கிக்கொண்டிருப்பதில் ஆச்சரியமில்லை. ஏனென்றால், நீங்கள் ஒரு கிறிஸ்தவ தேசத்தின் பெயரால் அழைக்கப்பட்டு, கிறிஸ்தவத்தின்



பிதா தமக்குக் காண்பிக்கிற தையே தவிர, தாம் வேறொன்றும் செய்வதில்லை என்று அவர் சொன்னார். அவர் மக்களைப் பார்ப்பார், அவர்கள் என்ன செய்துகொண்டிருக்கிறார்கள், என்ன செய்தார்கள், அவர்களுடைய எதிர்காலம் எப்படி இருக்கும் என்பதை அவர் அறிந்திருந்தார், மேலும் அவர் அதை அவர்களிடம் சொன்னார்.

அவரைப் பற்றி பிரசங்கிகள் என்ன சொன்னார்கள் என்று உங்களுக்குத் தெரியுமா? அவர் பெயல்செபூல், ஒரு குறிசொல்பவர் என்றார்கள். அது சரிதான். அதன் அடிப்படையில்தான் அவர்கள் அவரைச் சிலுவையில் அறைந்தார்கள். இப்போது, ஆனால் அவர் சொன்னார், "வீட்டெஜமானையே பெயல்செபூல் என்று சொன்னார்களானால், அவனுடைய வீட்டாரை அப்படிச் சொல்வது அதிக நிச்சயமல்லவா?" அது சரிதானே?

ஆனால் அவர் சொன்னார், "நான் செய்கிறவைகளை நீங்களும் உலகத்தின் முடிவுபரியந்தமும் எப்பொழுதும் செய்வீர்கள்." அது சரிதானே? இப்போது, இயேசு

ஆனால், சுகமளிப்பதைப் பொறுத்தவரை, இயேசுவால் அவனைக் குணமாக்க முடியாது. அது உங்களுக்குத் தெரியுமா? அவர் அதை ஏற்கனவே செய்துவிட்டார். ஏற்கனவே செய்துவிட்ட ஒன்றை அவர் எப்படி இரண்டாவது முறை செய்ய முடியும்? "நான் கல்வாரியில் மரித்தபோது, நான் உன்னைக் குணமாக்கினேன்.

அதை நீ விசுவாசிக்கவில்லையா?" என்று அவர் சொல்வார். அவர்களுக்கு இதுதான் அவருடைய செய்தியாக இருக்கும் என்று நீங்கள் விசுவாசிக்க வில்லையா? அவரால்... அவரால் அதை இரண்டாவது முறை செய்ய முடியாது. அவர் ஒருமுறை செய்ததை, அவரால் மீண்டும் செய்ய முடியாது.

*30* இப்போது அது இந்த மனிதனின் விசுவாசத்தைப் பொறுத்தது. இப்போது, அவனுடைய வாழ்க்கை அல்லது அவனுக்கு என்ன பிரச்சனை என்பதைப் பொறுத்தவரை, இயேசுவுக்குத் தெரிந்திருக்கும். அவர் சுற்றித்திரிந்தார்;



அடிப்படை நியமங்களையே நிராகரித்து விட்டீர்கள். அது முற்றிலும் உண்மை.

*13* பில்லி கிரஹாம், சில காலத்திற்கு முன்பு, ஒரு கூட்டத்தை நடத்தி, ஒரு குறிப்பிட்ட நகரத்திற்குச் சென்று, தங்களுக்கு முப்பதாயிரம் மனந்திரும்பியவர்கள் கிடைத் தார்கள் என்று கூறினார். முப்பது நாட்களுக்குப் பிறகு அவர்களைத் தேடிப் பார்த்தபோது, மனந்திரும்பிய முப்பது பேரைக் கூட கண்டுபிடிக்க முடியவில்லை. இதிலுள்ள பிரச்சனை என்னவென்றால், நீங்கள் மக்களை எழுந்து நின்று "கிறிஸ்துவை எனது தனிப்பட்ட சாட்சியாக ஏற்றுக்கொள்கிறேன்" என்று சொல்லச் சொல்கிறீர்கள், அப்படி எழுந்து நிற்பதைப் பற்றி மட்டுமே அவர்களுக்குத் தெரியும்; ஒரு சிறிய மனதின்... அல்லது உற்சாகத்தின் அடிப்படையில் செயல்பட்டி ருக்கிறார்கள். அடுத்த காரியம் உங்களுக்குத் தெரியும், அது மறைந்துவிடுகிறது. அந்த மனிதன் எப்போதாவது நிலைத்திருப்பதற்கு ஒரே வழி, அவன் அங்கே விழுந்துகிடந்து, தன் சுயத்திற்கு மரித்து, தேவனுடைய ஆவியானவரால் மறுபடியும் பிறந்து, பரிசுத்த

ஆவியினால் நிரப்பப்படுவதுதான். அதன்பிறகு அவன் அவனுடையவன் அல்ல, தேவன் அவனைப் பொறுப்பேற்று, முழுக்கட்டுப் பாட்டையும் கொண்டு, அவனுக்குள் செயல் படுகிறார். பின்பு அவனால் வேறெதுவாகவும் இருக்க முடியாது, ஏனென்றால் தேவன் அவனை ஒரு புதிய சிருஷ்டியாக மாற்றிவிட்டார்.

அதுதான் இன்றைக்குள்ள பிரச்சனை, நாம் இறையியலையும், சிறிய, பழைய, குழந்தைத் தனமான, அற்பமான காரியங்களையும் போதித்துக்கொண்டிருக்கிறோம். மூடி என்ன சொன்னார், ஏ.பி. சிம்சன் என்ன சொன்னார் என்பதை அவர்கள் திரும்பத் திரும்பக் குறிப்பிடுகிறார்கள். அவர்கள் நல்ல மனிதர்கள், ஆனால் அவர்கள் தங்களுடைய காலத்தில் வாழ்ந்துவிட்டார்கள். நூற்று ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு, உலகின் தலைசிறந்த அறிவியலாளரான ஒரு பிரெஞ்சு விஞ்ஞானி, "ஒரு மனிதன் மணிக்கு இருபது மைல்கள் என்ற பயங்கரமான வேகத்தை அடைந்தால், புவியீர்ப்பு விசை அவனை பூமியை விட்டுத் தூக்கி எறிந்துவிடும்" என்று கூறினார். ஏன்,



இப்போது, நீங்கள் விரும்பினால் அனைவரும் மெதுவாகப் பாடுவோம். நீங்கள் விரும்பினால், '*ஒன்லி பிலீவ்*' (விசுவாசித்தால் மட்டும் போதும்) பாடுவோம்.

*விசுவாசித்தால் மட்டும் போதும், விசுவாசித்தால் மட்டும் போதும்,*

*எல்லாம் கூடும், விசுவாசித்தால் மட்டும் போதும்;*

*விசுவாசித்தால் மட்டும் போதும்...* [ஒலி நாடாவில் காலியிடம்]...?...

**29** இப்போது, அவர் அந்த மனிதருக்காகச் செய்யக்கூடிய காரியம் ஒன்றும் இல்லை, ஒருவேளை அவனுடைய விசுவாசத்தைத் தூண்டுவதற்காக ஏதேனும் செய்யலாம், அவனுக்கு என்ன குறைபாடு இருந்தது என்பதை ஒருவேளை அவனிடம் சொல்லலாம். அவன் ஒரு பாவியாக இருந்தால், தேவனிடத்தில் சென்று சரியாக்கிக்கொள் என்று அவர் அவனிடம் சொல்வார்.

அவர்களுக்கு உதவவும் நான் தேவனின் முன்பாக என் பங்கைச் செய்ய முயற்சிக்கிறேன். அவர்களுக்காக நான் ஜெபிப்பதற்கு உதவும் வகையில் நீங்களும் போதுமான உண்மையுடன் இருங்கள்.

*28* சரி, ஜெப அட்டை எண் ஒன்றைக் கூப்பிடுவோம். *(அது என்ன எழுத்து, பில்லி?)* R, ஒன்று: அந்த ஜெப அட்டை யாரிடம் இருக்கிறது? இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு, ஒன்பது, பத்து; நாம் அவர்களை முதலில் அழைப்போம், தூக்கிக் கொண்டு வர வேண்டிய யாராவது இருக்கிறார்களா என்று பார்ப்போம்.

உங்களுக்குச் சம்மதமானால், இந்தப் பக்கமாக நகர்ந்து வாருங்கள். சரி, நாம்... *(நேற்றிரவு நமக்கு எத்தனை பேர் வந்தார்கள்? பத்தா பதினைந்தா? சுமார் பதினைந்தா? சரி.)* சரி, பதினொன்று, பன்னிரண்டு, பதிமூன்று, பதினான்கு, பதினைந்து. R முதல் பதினைந்து வரை, அது எப்படி வருகிறது என்று பார்ப்போம்.



எவ்வளவு முட்டாள்தனம். அறிவியல் அவனை மணிக்கு தொள்ளாயிரம் மைல் வேகத்தில் செல்ல வைத்திருக்கிறது, இப்போது ஒரு ஜெட் விமானத்திலோ அல்லது அது போன்ற ஒன்றிலோ, மேலும் அவனை வெகுதூரத்திற்கு அழைத்துச் செல்கிறது. அவர் ஒருபோதும் அவர்களைத் திரும்பக் குறிப்பிடுவதில்லை. மூடிக்கு அவருடைய காலத்திற்கான ஒரு செய்தி இருந்தது, சிம்சனுக்கு அவருடைய காலத்திற்கான செய்தி இருந்தது, கால்வின் மற்றும் மற்ற அனைவருக்கும் அவர்களுடைய காலத்திற்கான செய்தி இருந்தது; ஆனால் இது இன்னொரு நாள். அவர்கள் மாட்டு வண்டியில் போய்க்கொண்டிருந்தார்கள், நாம் ஒரு ஜெட் விமானம், முன்னோக்கிச் சென்று கொண்டி ருக்கிறோம்.

*14* சகோதரனே, நான் உங்களுக்குச் சொல்கிறேன், தேவனுடைய பயன்படுத்தப் படாத வளங்கள் இங்கே நமக்கு முன்பாகத் தொங்கிக் கொண்டிருக்கின்றன, இங்கே எல்லாமே சாத்தியம். மனிதர்கள் அப்படி அண்ணாந்து பார்ப்பதற்குப் பதிலாக, இப்படித்

திரும்பிப் பார்த்துக்கொண்டே இருப்பது வெட்கக்கேடானது.

பரிசுத்த மத்தேயு பதின்மூன்றாம் அதிகாரத்தில் இயேசு சொன்னார், அங்கே விதைக்கிறவன் ஒருவன் விதைகளை விதைக்கப் புறப்பட்டான், அவனுக்குப் பின்னால் ஒருவன், ஒரு சத்துரு வந்து, களைகளை விதைத்தான். வீட்டெஜமான், "அவைகளைப் பிடுங்கிப்போட உமக்குச் சித்தமா?" என்று கேட்டார்கள்.

அவர், "அவைகள்... இரண்டையும் ஒன்றாக வளர விடுங்கள். அந்த நாளில், நான் முடிவெடுப்பேன். தேவதூதர்கள் வந்து கோதுமை முதலானவற்றை எடுப்பார்கள். களைகளை அக்கினியால் சுட்டெரிப்பார்கள்" என்றார்.

இப்போது, நாம் எப்போதும் உலகம் எவ்வளவு பொல்லாததாக இருக்கிறது என்று பேசுகிறோம், அது உண்மைதான். பெண்கள் எப்படி சிகரெட் குடிக்கிறார்கள் மற்றும்—மற்றும்—மற்றும் ஆண்கள் குடித்துவிட்டு, சேற்றில் உழலுவது போல், பீரும் மற்றுமானவைகளில் உழலுகிறார்கள், இன்



மற்றொருவருக்குப் பரவுகிறது. புரிகிறதா? அவிசுவாசம் என்பது மிகவும்... மக்களை விட்டு விலகியிருக்கும் எந்தவொரு பிசாசுக்கும், ஒரு அவிசுவாசியானவன் பிசாசுக்கு ஏற்ற ஒரு பரிபூரணமான நபராவான். கதரேனருடைய ஊரில் இருந்த பிசாசு பிடித்தவனிடமிருந்து துரத்தப்பட்ட பிசாசுகள் உங்களுக்கு நினைவிருக்கிறதா? "எங்களை அந்தப் பன்றிகளுக்குள் போகவிடும்" என்று அவை கேட்டன. அவைகளும் அப்படியே செய்தன, அந்தப் பன்றிகள் கடலில் மூழ்கின.

இப்போது, விசுவாசம் வையுங்கள், நம்புங்கள், பயபக்தியுடன் இருங்கள்; ஜெப நேரத்தின்போது அங்கும் இங்கும் நகர வேண்டாம். நாங்கள் ஜெபிக்கிறோம், எனது முழு முயற்சியையும் செய்கிறேன். இங்குள்ள இந்த மக்களில் சிலர் உங்கள் அப்பாவாகவும் அம்மாக்களாகவும் இருக்கலாம், அல்லது வேறு யாருடைய அப்பாவாகவும் அம்மாவாகவும், சகோதரர்களாகவும் சகோதரியாகவும் இருக்கலாம். அவர்கள் வேடிக்கைக்காக இங்கே வரவில்லை, அவர்கள் குணமடையவே இங்கே வந்திருக்கிறார்கள். அவர்களுக்காக ஜெபிக்கவும்,

உங்களுக்குத் தெரியும், நான் அதைப் பார்க்க முடியும்...

சரி; நான் உங்களிடம் ஒன்றைக் கேட்கப் போகிறேன். நான் உங்களுக்குச் சொன்னதை உண்மை என்று நீங்கள் விசுவாசித்தால், கர்த்தருடைய தூதர் அருகில் இருக்கிறார் என்று நீங்கள் விசுவாசித்தால், நீங்கள் வந்து அமர வேண்டும், அல்லது, நீங்கள் இருக்கிற இடத்திலேயே அமர்ந்து ஜெபிக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். மேலும், "தேவனே, அது உண்மை என்று நான் விசுவாசிக்கிறேன்" என்று சொல்லுங்கள். தேவன் உங்களிடம் பேசுகிறாரா இல்லையா என்பதைப் பாருங்கள். அதை முயற்சி செய்து பாருங்கள்.

27 இப்போது நினைவில் கொள்ளுங்கள், ஒருவேளை யாராவது ஒரு விமர்சகரோ அல்லது அவிசுவாசியோ இருந்தால், அந்த நபருக்கு நான் பொறுப்பல்ல. சட்டத்தின்படி, நான் அதைச் சொல்லியாக வேண்டும், ஏனென்றால் நான் நான்கு அல்லது ஐந்து முறை பிடிபட்டிருக்கிறேன், பார்த்தீர்களா. ஏனென்றால் நினைவில் கொள்ளுங்கள்: வியாதிகள் ஒருவரிடமிருந்து



றைக்கு நாம் செய்யும் விதம் மற்றும் எல்லாப் பக்கங்களிலும் பாவம். சபைகள், மற்றும் ஊழியர்கள் மற்றும் அனைவரும், புகைபிடித்தல், குடித்தல், சூதாட்டம், பார்ட்டிகள் மற்றும் சினிமாக்களுக்கும், நடனங்களுக்கும், நரகக் குழிகளுக்கும், மற்றும் எல்லா காரியங்களுக்கும் ஓடுகிறார்கள். அது எவ்வளவு பொல்லாதது என்று நாம் அனைவரும் பேசுகிறோம், நீங்கள் எப்போதும் அதையே பார்க்கிறீர்கள். அதுதான் களை. ஆனால் நான் உங்களுக்கு ஒன்று சொல்கிறேன், சகோதரனே, அதே நேரத்தில் சபையும் வளர்ந்து வருகிறது என்பதை நீங்கள் அறிய மறந்துவிடுகிறீர்கள். அவை இரண்டும் ஒன்றாக வருகின்றன. பரிசுத்த ஆவியானவரின் வல்லமை உள்ளே வந்து, பாவத்தை அழித்து, கிறிஸ்து இயேசுவுக்குள் புதிய சிருஷ்டிகளை உருவாக்கி, அடையாளங்களையும், அற்புதங்களையும், அதிசயங்களையும் வெளிக்கொண்டு வருகிறது. ஆமென்.

நான் ஒரு சத்தம்போடும் பாப்திஸ்து என்று நீங்கள் நினைக்கிறீர்கள் என்று கருதுகிறேன், ஆனால் நான் பரிசுத்த ஆவியைப் பெற்ற ஒரு

பாப்திஸ்து. சரி, ஆம் ஐயா. நான் நம்புகிறேன், சகோதரனே. நமக்குத் தேவையானது ஒரு பழைய காலத்து, தேவனால் அனுப்பப்பட்ட ஒரு எழுப்புதல் என்று நான் நம்புகிறேன், அதுதான் சரி. அதைச் செய்யும் வரை நாம் எங்கும் செல்லப்போவதில்லை.

இங்கே அமர்ந்திருக்கும் சகோதரர் பாஸ்வொர்த்தைப் பற்றி நான் நினைக்கிறேன், அங்கே தென்னாப்பிரிக்காவில், சுமார் ஒரு லட்சம் மக்கள் அங்கே கூடியிருந்தார்கள், தேவன் அற்புதமாகத் திரும்பியதை அவர்கள் கண்டார்கள், முப்பதாயிரம் பேர் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருந்தார்கள். மேலும் ஒரு ஜெபம், ஒரே ஒரு ஜெபம், முடமான படுக்கைகள் மற்றும் எல்லாவற்றிலும், அவர்கள் முடமாகிக் கிடந்த படுக்கைகள், மற்றும் கட்டில்கள், மற்றும் ஸ்ட்ரெச்சர்கள், மற்றும் கைத்தடிகளிலிருந்து ஆயிரக்கணக்கானோர் தங்கள் கால்களில் எழுந்து நின்றார்கள், வண்டி வண்டியாக அவற்றை அடுக்கினார்கள். ஒரு ஜெபம், அவர்கள் தேவன், யெகோவா, தம்முடைய வல்லமையில்



பேசுகிறேன். வேதாகமம் அந்த மக்களைப் பற்றிப் பேசுகிறது.

கம்யூனிசம், ஜோ ஸ்டாலின் அல்லது அவர்களைப் போன்ற சிலரைத்தான் அந்திக் கிறிஸ்து என்று நீங்கள் அனைவரும் நினைக்கிறீர்களா? அது தவறு. அந்திக் கிறிஸ்துவானவன் எவ்வளவு மதபக்தி உள்ளவனாக இருக்க முடியுமோ அவ்வளவு மதபக்தி உள்ளவனாக இருப்பான், ஏதுவானால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத் தக்கதாக இருப்பான். அவன்தான் அந்திக்கிறிஸ்து.

சரி, நாம் ஒரு பத்து அல்லது பதினைந்து பேரை அழைத்து அவர்களுக்காக ஜெபிக்க முயற்சிப்போம். அங்கே வெளியே இருக்கும் மற்றவர்களில், ஜெப அட்டை இல்லாதவர்கள் எத்தனை பேர்? ஜெப அட்டை இல்லை, ஆனாலும் ஜெபிக்கப்பட வேண்டும் என்று விரும்புகிறவர்கள், உங்கள் கையை உயர்த் துங்கள். நீங்கள் எங்கே அமர்ந்திருக்கிறீர்கள் என்ற ஒரு கருத்தை என்னால் பெற முடியும்,

அபிஷேகத்திலிருந்து முற்றிலும் மாறுபட்டதாகும். ஒன்றில், நீங்கள் ஆசீர்வதிக்கப்படுகிறீர்கள்; மற்றொன்று உங்களில் இருந்து வெளியேற்றுகிறது. அது அப்படி இருக்கிறது என்பதை... அதை எத்தனை பேர் அறிவீர்கள்...

தீர்க்கதரிசியான தானியேல் ஒரு தரிசனத்தைக் கண்டான், அவனைக் கண்டபோது அவன் பல நாட்களாகத் தன் தலையில் கலக்கமடைந்திருந்தான் என்று சொன்னான்: ஒரே ஒரு தரிசனம். சரி, நித்தியத்தின் இந்தப் பக்கத்தில் அது என்ன என்பதை நீங்கள் ஒருபோதும் உணர மாட்டீர்கள்.

சரி. பில்லி எங்கே?

*26* இப்போது பாருங்கள், நான் ஊழியர்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தேன். இங்கே இருக்கும் இந்த மனிதர்களை நான் சொல்லவில்லை. அவர்கள் விசுவாசிக்கிற ஊழியர்கள். அவர்கள் விசுவாசிக்காவிட்டால் இங்கே அமர்ந்திருக்க மாட்டார்கள். ஆனால், "ஓ, அதில் ஒன்றுமேயில்லை. ஹ்ம்ம்" என்று சொல்லும் அந்த ஆட்களைப் பற்றி நான்



அசைவாடுவதைக் கண்டார்கள். அது அனைத்தையும் முடித்துவைத்தது.

*15* ஆனால் அமெரிக்கர்களாகிய நாம், நன்றாகச் சாப்பிட்டு, கொழுத்து, அலங்கரிக்கப்பட்டிருக்கிறோம். நாம் உட்கார்ந்துகொண்டு, “சரி, என் போதகர் அது போன்ற காரியங்களை நம்புவதில்லை. என்ன நடக்கிறது என்று பார்ப்பதற்காக மட்டும் நான் அங்கு செல்வேன்...” என்று சொல்கிறோம். உங்களால் எங்கும் செல்ல முடியாததில் ஆச்சரியமில்லை. ஊகூம். இதுதான் உண்மை. இது ஒரு வெட்கக்கேடு. தேவனை அவருடைய வல்லமையிலும், அவருடைய தெய்வத்துவத்திலும், அவருடைய அசைவாடுதலிலும் நாம் அங்கீகரிப்பதில்லை. இது வெட்கக்கேடானது. ஓ, சரி, நாம் நியாயத்தீர்ப்புக்குத் தயாராக இருக்கிறோம், நிச்சயம் அதைப் பெறப்போகிறோம். அதுதான் உண்மை. சரி.

“என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களை ஒன்றாகக் கூட்டிக்கொண்டு ஜெபம்பண்ணினால், நான் பரலோகத்திலிருந்து கேட்பேன்.” ஆனால் மற்ற எல்லாமே நமது

பாதைகளிலும் அது போன்ற காரியங்களிலும், இந்த பல்வேறுபட்ட எல்லா காரியங்களிலும் தொங்கிக்கொண்டிருக்கையில், அதை நாம் எப்படிச் செய்ய முடியும்...?

பாவம் சிறிய பழைய அமெரிக்கா, ஏன், இது ஒரு வெட்கக்கேடு. ஒவ்வொரு மூலையிலும் நமக்கு ஒரு சபை இருக்கிறது, ஒவ்வொரு போதகரும் சண்டையிடுகிறார்கள். "அதுபோன்ற கூட்டங்களில் ஒன்றை ஆதரிக்க... நான் பயப்படுகிறேன். அவர்கள் எனது மக்களில் சிலரை இழுத்துச் சென்றுவிடுவார்கள்." ஏன், இது ஒரு சாப்பாட்டு டிக்கெட். இது வெட்கக்கேடு! அதுதான் உண்மை! நீங்கள் ஒரு சாப்பாட்டு டிக்கெட்டைக் குறித்து என்ன நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள், லட்சக்கணக் கானோர் அங்கே புறமதங்களில் மரித்துக் கொண்டிருக்கிறார்கள்? ஏன், எல்லா இடங் களிலும் பிரசங்கிகள் சுற்றிக் கொண்டி ருக்கிறார்கள், தங்களுடைய சிறிய சபைகள் மற்றும் தங்கள் ஸ்தாபனங்களைப் பற்றி வீணாகக் கவலைப்பட்டுக்கொண்டும், இதையும், அதையும், மற்றதையும் கிழித்தெறிந்து



போல பேசவும் எங்களுக்கு உதவி செய்யும். எங்களுக்கு உதவி செய்யும், ஆண்டவரே. இன்றிரவு உம்முடைய ஆவியானவர் இறங்கி வந்து, உம்முடைய அடியானை அபிஷேகம் செய்வாராக. மேலும் சர்வவல்லமையுள்ள தேவனின் கரம் இன்றிரவு இந்தக் கட்டிடத்தில் காணப்படுவதாக; அதனால் இன்றிரவு நாங்கள் இங்கிருந்து வெளியே செல்லும்போது, அந்த நாளில் எம்மாவுவிலிருந்து வந்தவர்களுடன் சேர்ந்து நாங்களும், "அவருடைய பிரசன்னத் தினால் நம்முடைய இருதயம் நமக்குள்ளே கொழுந்துவிட்டு எரியவில்லையா?" என்று சொல்லும்படிச் செய்யும். ஏனெனில் அவருடைய நாமத்தில் இதைக் கேட்கிறோம். ஆமென்.

**25** நண்பர்களே, உங்கள் நேரத்தை இப்படி எடுத்துக்கொண்டதற்காக என்னை மன்னியுங்கள். பொதுவாக எனது பிரசங்கம் ஞாயிற்றுக்கிழமை மதியங்களில் இருக்கும். அந்த அபிஷேகத் திற்குள் நான் செல்லும்போது, அது என்னைச் சற்று தொந்தரவு செய்கிறது. ஆனால் நினைவில் கொள்ளுங்கள், பிரசங்கிப்பதற்கான அபிஷேகம் என்பது கர்த்தருடைய தூதரின்

களுக்கும் எட்டும்படி குவிந்துள்ளன. தேவன் தமது வாக்குத்தத்தத்தை நினைவுகூர்ந்திருக்கிறார். ஓ தேசமே, உன் தேவனிடத்திற்குத் திரும்பு.

*24* பிதாவே, இன்றிரவு உமது குமாரனாகிய இயேசுவின் நாமத்தில் நான் ஜெபிக்கிறேன், இங்கே கூடியிருக்கும் இந்த சிறிய ஏழை மக்கள் கூட்டத்தில், சிலர் வியாதியுற்றும் மரித்துக் கொண்டும் இருக்கிறார்கள், ஆண்டவரே; அவர்கள் தேவையில் இருக்கிறார்கள். ஒருவேளை அவர்கள் தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பெலனை மறுதலிக்க முயற்சிக்கிற பிசாசுகளின் உபதேசங்களால் மூளைச்சலவை செய்யப் பட்டிருக்கலாம், ஆனால் எப்படியோ நீர் அவர்கள் இருதயங்களில் பேசி அவர்களை இங்கே வெளியே கொண்டுவந்துள்ளீர். இப்போது அவர்களுக்கு ஒரு திருப்புமுனையைக் கொடுத்தருளும். அவர்கள் வர ஆயத்தமாக இருக்கிற ஒரு இடத்தை அவர்களுக்குக் கொடுத்தருளும்.

மேலும் ஆண்டவரே, நாங்கள் தைரியமாக இருக்கவும், முற்காலத்தில் இருந்த பவுலைப்



கொண்டும், ஒருவரையொருவர் பார்த்து சீறிக்கொண்டும் இருக்கிறார்கள்.

ஏன், இது ஒரு அவமானம். ஒரு மனிதன் சுவிசேஷத்தை ஒருமுறை கூட கேட்காதபோது, ஒரு மனிதன் இரண்டு முறை அதைக் கேட்பது நியாயமல்ல. யாராவது அங்கே நகரவேண்டிய நேரம் வந்துவிட்டது.

*16* இரண்டாயிரம் ஆண்டுகளாக நமக்கு இறையியல்-போதனை இருந்து வருகிறது, மேலும் பூமியின் மூன்றில் இரண்டு பங்கு மக்கள், உலக மக்களில், இயேசு கிறிஸ்துவைப் பற்றி கேள்விப்பட்டதே இல்லை. இது என்ன? வார்த்தையை-போதிக்கும் இறையியல் அதன் காலத்தை வாழ்ந்து முடித்துவிட்டது, அது முடிந்துவிட்டது. நமக்கு அடையாளங்களும் அற்புதங்களும் வல்லமைகளும் இருக்க வேண்டும் மற்றும்... அந்த காரியம் என்ன... அவர்கள் மிஷனரிகளை அனுப்பிக் கொண்டிருந்தது என்ன, அங்கே கென்டக்கியின் லூயிஸ்வில்லியில் நான் பேசியபோது, ஒரு நாள் இரவு யூத மருத்துவமனையில் உள்ள மருத்துவ வாரியத்தில், தெய்வீக சுகமளிப்பதைப் பற்றி

பேசுவதற்காக சில மருத்துவர்கள் என்னை அங்கே அழைத்திருந்தார்கள்.

அங்கிருந்து நாங்கள் ஒரு ஊழியர்களின் கூட்டத்திற்குச் சென்றோம். கர்த்தருடைய தூதன் எனக்குத் தரிசனமானார் என்று நான் அவரிடம் சொன்னபோது, எனக்கு கெட்ட கனவு வந்திருப்பதாக ஒரு பிஷப் என்னிடம் கூறினார். அவர் அங்கே அமர்ந்திருந்தார்.

மேலும் அவர், “இன்று இரவு நமக்காக சகோதரர் பிரன்ஹாம் பேசுவார்” என்றார்.

ஓ, அது எனக்கு எவ்வளவு பிடித்திருந்தது. “இதோ வந்துவிட்டது” என்று நான் நினைத்தேன்.

17 இப்போது நமது சொந்த சபையே குறைந்தது நூற்று ஐம்பது ஆண்டுகளாக ஆப்பிரிக்காவிற்கு மிஷனரிகளை அனுப்பி வருகிறது. அது சரி, ஆப்பிரிக்காவுக்கு மிஷனரிகளை அனுப்புகிறது. நாம் பல லட்சக் கணக்கான, கோடிக்கணக்கான டாலர்களைச் செலவழித்திருக்கிறோம், ஆனால் நான் அவர்களைப் பார்த்தபோது (சகோதரர்



செய்யும். தவறுக்கு எதிராக சத்தமிடவும், சரியானது எதுவோ அதை "சரி" என்றும், தவறானது எதுவோ அதை "தவறு" என்றும் சொல்லவும் எங்களுக்கு உதவி செய்யும்.

மேலும் இன்றிரவு, இங்கே, சுடப்பட்ட வாத்துகளின் கூட்டத்தைப் போலிருக்கிற, ஒரு கைப்பிடியளவான இந்த ஏழ்மையான சிறிய மக்கள் கூட்டத்தின் முன்பாகப் பிரதிநிதித்துவப் படுத்த முயற்சிக்கிறோம்.

இங்கே ஆயிரக்கணக்கானோர் குடிப்பழக்கத் திலும், திரைப்படக் காட்சிகளிலும் இடங்களை நிரப்பிக்கொண்டிருக்கிறார்கள். நீர் சொன்னீர், "நோவாவின் காலத்திலே எப்படி நடந்ததோ, அப்படியே மனுஷகுமாரன் வரும் காலத்திலும் நடக்கும். நோவா பேழைக்குள் பிரவேசிக்கும் நாள்வரைக்கும், ஜனங்கள் புசித்தும் குடித்தும், பெண்கொண்டும் பெண்கொடுத்தும், உணராதி ருந்தார்கள்; அப்படியே மனுஷகுமாரன் வருங்காலத்திலும் நடக்கும்."

அமெரிக்காவே, அமெரிக்காவே, உனக்கு விரோதமாக எப்படிப்பட்ட எச்சரிப்பின் சத்தம். உன் பாவங்கள் சந்திரனுக்கும் நட்சத்திரங்

***23*** எங்கள் பரலோகப் பிதாவே, எங்கள் முற்பிதாக்கள் உம்மீது வைத்த நம்பிக்கையில், இங்கே எங்கும் தங்கள் இரத்தத்தைச் சிந்திய, எங்களுடைய இந்த அழகான தேசத்தைப் பார்க்கும்போது இதயம் கலங்குகிறது. அவர்களுடைய பிள்ளைகள் அதை இழந்து விட்டார்கள் என்பதை நினைக்கும்போதும்; வாலி ஃபோர்ஜுக்கு (Valley Forge) முன்பு ஜார்ஜ் வாஷிங்டனைப் பற்றி நினைக்கும்போதும்; இதே தேசத்தில் பிறந்த ஆபிரகாம் லிங்கன் சுடப்பட்டு, மரணப் படுக்கையில் கிடந்தபோது, "என் முகத்தை அஸ்தமிக்கும் சூரியனை நோக்கித் திருப்புங்கள்" என்று சொல்லி, ‘பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே’ என்று தொடங்கின அவருடைய மரணத்தை நினைக்கும்போதும் (இதயம் கலங்குகிறது).

ஓ தேவனே. சரி, இதைக் குறித்து நாம் நிறைய செய்ய முடியும், ஆண்டவரே. ஒரு பின்வாங்கிப்போதல் வருமென்று நீர் சொன்னீர், அப்படியே நாமும் அதை அடைந்திருக்கிறோம். ஆனால் ஆண்டவரே, திறப்பிலே நிற்கிற போர்வீரர்களைப் போல எங்களுக்கு உதவி



பாஸ்வொர்த்தைக் கேட்டுப் பாருங்கள்), சிங்கத்தின் நகங்கள், சிறிய மண் சிலைகள், மாந்திரீகத் தாயத்துக்கள் போன்றவற்றைச் சுமந்து கொண்டிருந்தார்கள். “ஓ, ஆம், நான் ஒரு கிறிஸ்தவன்.” ஊகூம். “நான் ஒரு கிறிஸ்தவன்.”

“ஆனால்,” நான் கேட்டேன், “நீங்கள் எதற்காக அந்தச் சிலையைச் சுமந்து கொண்டிருக்கிறீர்கள்?”

“சரி, அது, என் அப்பா அதை வைத்திருந்தார், ஒரு நாள் சிங்கம் அவரைத் துரத்தியது, அவர் அதைக் கீழே வைத்துவிட்டு, ஒரு சிறு ஜெபம் செய்து, நெருப்பை மூட்டினார், சிங்கம் போய்விட்டது.”

நான் சொன்னேன், “சரி, நெருப்புதான் சிங்கத்தை விரட்டியது, ஜெபம் அல்ல... ஆனால் நீங்கள் ஒரு கிறிஸ்தவனா?”

“ஆம், சரி, அமோயா என்றால்...” காற்று... அமோயா என்ற வார்த்தைக்குக் காற்றைப் போல “காணப்படாத ஒன்று” என்று அர்த்தம், பாருங்கள். மேலும் அவர் சொன்னார், “அமோயா தவறினால், இது தவறாது,

பாருங்கள், என்னிடம் இரண்டு தெய்வங்கள் உள்ளன.'' மேலும் தங்களை ''கிறிஸ்தவர்கள்'' என்று அழைத்துக் கொள்கிறார்கள்.

ஆனால், சகோதரனே, குருடர்களைப் பார்க்கவும், செவிடர்களைக் கேட்கவும் செய்யும் தேவனுடைய வல்லமையை அவர்கள் கண்டபோது, அந்த விக்கிரகங்களைத் தரையில் உடைத்தெறிந்து இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டார்கள். நூற்று ஐம்பது ஆண்டுகளில் நீங்கள் செலவழித்த பணம் மற்றும் இறையியல் அனைத்தையும் ஒன்றாகச் சேர்த்தாலும், குருமார்கள் ''வெறித்தனம்'' என்று அழைக்கும் அந்த ஒன்றின் மூலம், ஐந்து நிமிடங்களில் அதிக ஆத்துமாக்களை கிறிஸ்துவுக்குள் வென்றெடுத்தார்கள். அல்லேலூயா! தேவனுடைய வழி சரியானது. உங்கள் சொந்த வழியிலிருந்து வெளியேறுங்கள், தேவனுடைய வழியில் வாருங்கள். தேவனை அவருடைய வார்த்தையின்படியே எடுத்துக்கொண்டு முன்னேறிச் செல்லுங்கள். ஆமென்.

*18* சகோதரர் பாஸ்வொர்த், நீங்கள் ஒரு பிரசங்கி, ஆனால் நான்... அது வெறுமனே...



அவர்கள் தொடர்புகொள்ளட்டும். அப்போது, "நான் தேவன் சொன்ன வார்த்தையை அப்படியே ஏற்றுக்கொள்கிறேன். தேவன் சொல்வதே எனக்கு இறுதியானது. டாக்டர் ஜோன்ஸ் என்ன சொன்னார் என்பதைப் பற்றி எனக்குக் கவலையில்லை. தேவன் என்ன சொன்னார் என்பது எனக்குத் தெரியும். அதுவே எனக்கு இறுதியானது" என்று முன்வந்து சொல்லும் மனிதர்களை நீங்கள் காண்பீர்கள். ஆமென்.

*22* நண்பரே, உலகத்திற்கு இன்று அதுதான் தேவைப்படுகிறது. அதாவது... அவர்களுக்குப் புதிய மேயர் தேவையில்லை. அவர்கள் தேர்தல்களையும் இவை அனைத்தையும் நடத்துகிறார்கள், என்னைப் பொறுத்தவரை அது சரிதான். அவர்கள் தங்கள் வேலையைச் செய்கிறார்கள். ஆனால், உலகத்திற்கு இன்று தேவைப்படுவது ஒரு நல்ல, பழங்காலத்திய, பரிசுத்த பவுலின் எழுப்புதலும், வேதத்தின்படியான பரிசுத்த ஆவியானவருமே ஆகும், இதுதான் இன்று சபைக்குத் தேவைப்படுகிறது. நாம் ஒரு நிமிடம் ஜெபிப்போம்.

அடைக்காத்து, ஒவ்வொரு நாளும் அவற்றைத் திருப்பிவிட்டு, அந்த முட்டைகளின் மேலேயே பட்டினியால் சாகலாம். ஆனால் அது ஆண் பறவையுடன் இருந்திருக்காவிட்டால், அந்தத் துணையின் ஒரு கருவுறும் தொடுதல் இல்லாவிட்டால், அது ஒருபோதும் குஞ்சு பொரிக்காது. இதைச் சுற்றியுள்ள பல சபைகளைப் போலவே.

*21* சகோதரனே, நான் உங்களுக்குச் சொல்கிறேன், நீங்கள் அவர்களை உறுப்பினர் களாகச் சேர்த்துக்கொண்டு, அவர்களுடைய பெயரைப் பலகையில் எழுதலாம்; ஆனால் அவர்கள் இயேசு கிறிஸ்துவோடு தொடர்புகொள்ளும் வரைக்கும், நீங்கள் அவர்களை உதவிக்காரர்களாகவோ அல்லது வேறு என்னவாகவோ ஆக்கினாலும், அது அழுகிய முட்டைகள் நிறைந்த ஒரு கூட்டாகவே இருக்கும். அவர்கள் ஒருபோதும் விசுவாசிக்க மாட்டார்கள்; சரிதான். அதற்குப் பதிலாக அந்தக் கூட்டினைச் சுத்தப்படுத்திவிட்டு, மீண்டும் புதிதாகத் தொடங்கலாம். மனுஷனுக்கு ஜீவனைக் கொடுக்கிறவரான, ஜீவனின் வித்தாகிய, துணையாகிய, கிறிஸ்துவுடன்



என் இதயம் வலித்துக்கொண்டிருந்தது. ஆமென். பரிசுத்த மத்தேயு 4-ம் அதிகாரத்தில் காணப்படும் சில வேதப்பகுதிகளை நான் வாசிக்கப் போகிறேன்:

**பின்பு, இயேசு கலிலேயா எங்கும் சுற்றி நடந்து, அவர்களுடைய ஜெப ஆலயங்களில் உபதேசித்து, ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, ஜனங்களுக்கு உண்டாயிருந்த சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கிச் சொஸ்தமாக்கினார்.**

**அவருடைய கீர்த்தி சீரியா எங்கும் பிரசித்தமாயிற்று. அப்பொழுது பலவித வியாதிகளையும் வேதனைகளையும் அடைந்திருந்த சகல பிணியாளிகளையும், பிசாசு பிடித்தவர் களையும் சந்திரரோகிகளையும் திமிர்வாதக்காரரையும் அவரிடத்தில் கொண்டுவந்தார்கள். அவர்களைச் சொஸ்தமாக்கினார்.**

“இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றென்றைக்கும் மாறாதவராயிருக்கிறார்.” அதே இயேசு, மரிப்பதற்காகவும், பிதாவினிடத்திற்குத் திரும்பிச் செல்வதற்காகவும், நம் அனைவர் மீதும் தம்முடைய ஆவியைத்

திரும்ப அனுப்புவதற்காகவும், சபையில் அதே வகையான அற்புதங்களைச் செயல்படுத்து வதற்காகவும் ஒரு நோக்கத்தோடு இங்கு வந்தார்.

நீங்கள் சொல்லலாம், "சரி, நீங்கள் போய் சிலரைக் குணமாக்குவதை நான் பார்க்கிறேன்."

பெதஸ்தா குளத்தைக் கடந்துசென்று, முடமான மற்றும் சப்பாணியான திரளான மக்களை அவர் விட்டுச் சென்றபோது, அவர்கள் அதையேதான் சொன்னார்கள். அவர் தம்முடைய சொந்த தேசத்திற்கு வந்தபோதும் அதையேதான் சொன்னார்கள், "அவர்களுடைய அவிசுவாசத் தினிமித்தம் அவரால் அங்கே எந்தப் பலத்த செய்கைகளையும் செய்ய முடியவில்லை."

*19* மனிதர்கள் தங்கள் விசுவாசத்தை மனிதனிடமிருந்து விலக்கி, தேவனிடம் கொண்டுவரும்போது, நீங்கள் அற்புதங்களைக் காண்பீர்கள். உங்களில் செலுத்தப்பட்டிருக்கும் இந்த எம்பாமிங் திரவத்தை நீங்கள் வெளியேற்றும்போது, பரிசுத்த ஆவியானவர் அதற்கான இடத்தை எடுத்துக்கொள்ள முடியும், அப்போது நீங்கள் அற்புதங்களையும்



அடையாளங்களையும் அதிசயங்களையும் காண்பீர்கள். அதுதான் சரி. ஆனால் அதைச் செய்யும் வரை, நீங்கள் மரித்தவர்கள்தான். அதுதான் சரி. உங்களால் முடியாது—உங்களால் முடியாது, கிடைத்துள்ளது... உங்களை நிலைநிறுத்துவதற்கு உங்களிடம் எதுவுமே இல்லை. நீங்கள் எவ்வளவு அடித்தளமற் றவர்களாக இருக்க முடியுமோ அவ்வளவு அடித்தளமற்றவர்களாக இருக்கிறீர்கள்; உங்களுக்கு—உங்களுக்குப் பரிசுத்த ஆவியானவர் இல்லையென்றால், வெளியே சென்று, அதைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

*20* இது எனக்குப் பறவைகளை நினை வூட்டுகிறது. வருஷத்தின் வசந்த காலத்தில், அவை பறந்து திரிகின்றன, தங்கள் கூட்டைக் கட்டுகின்றன, ஒரு கூடு நிறைய முட்டைகளை இடுகின்றன. அந்தப் பழைய பெண் பறவை, ஒரு கூடு நிறைய முட்டைகளை இட முடியும், ஆனால் அது அந்த ஆண் பறவையோடு இருந்திருக்காவிட்டால், அவற்றுக்கு உயிர் இருக்காது. அது அந்த கூட்டின் மீது அமரலாம், அது... அது மிகவும் மெலிந்து பறக்க முடியாத நிலை வரும் வரை. அது அந்த முட்டைகளை